640

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 3 0 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஞு ஏப்ரல் மீ 9 உ [No. 14.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 261
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 263
3. பிஸாரோ நாடகம் - (அங்கம்-3, களம்-3.)
R. B. Sheridan 265
4. சூளாமணி (உரையுடன்)
இரதநூபுரச் சருக்கம் (1—12) 268
5. யாப்பிலக்கணம்—(அடி) 271
6. ஞானமொழிகள் (க. வேலுப்பிள்ளை) 273
7. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 274
8. வர்த்தமானம் 279

கலாநிலயம்

188912

உண்மையில் உழல்வார் திறம்.

2.

ஒன்று இருக்கவேண்டிய தன்மை எதுவோ அதுவே அதன் மெய்ம்மை; மற்று ஒன்று எவ்வாறு இருக்கின்றதோ அதுவே அதன் உண்மை. உண்மையை உற்றுநோக்கிநோக்கிக் களைப்படைந்த கண்களால் மெய்ம்மையைக் காணமாட்டாமல் திகைப்படைந்து மதிமயங்கிச் சாய்வார் திரள் இவ்வுலகின் பரப்பில் இற்றைநாள் மிகப் பெரிது. அருள்சேரா வாழ்க்கையெலாம் இருள்சூழ்ந்து கொள்ளுமாதலால், மெய்ம்மை புலப்படாமல், அவ்விருளூடு கண்டதே கோலமெனக் கொள்கின்ற உலோகாயதமே மாநுட வாழ்க்கையைக் கதுவி விழுங்குகின்றது.

உயர்ந்தோர் இதற்கு உடன்பட மாட்டார். இருப்பன எவ்வகைத்தாயினும் அவை உவப்பதற்குரியன வல்லவாயின் மெய்ம்மையோ அவைதாம் ஆகாவென உற்றறிந்து மறக்குந் திறனுடைய சிந்தனையொன்று சான்றோர்பால் என்றுஞ் சிறக்கலாகின்றது. உண்மையை உதறி மெய்ம்மையை மேற்கொள்ளு மாற்றலே வீரம். இவ்வீரந்தான் வாய்க்கப்பெற்றவர் வழி வேறு, வாழ்க்கை வேறு, நோக்கமும் வேறு. காமமே காழ்கொண்டு மனிதரிற் பெரும்பாலோர் மனமெல்லாம் நுங்கிய நொய்ம்மையை எங்குங் காண்கின்றனர். உண்மை இதுவெனத் தம் கண்களால் காண்கின்றாராலும் சான்றோர் அவ்வுண்மைக்குத் தாமும் ஆட்செய்வதே தக்கதெனத் தருக்கமாட்டார். வஞ்சனையால் வவ்வினாலன்றி விழுப்பொருள் கிடைக்காமை கண்கூடாகின்றது; ஆயினும், அவ்வஞ்சனையை வழிபடவிரையமாட்டார். பிறர்படு துயர்க் கிரங்கினால் தன்னயம் பயக்காமை பார்க்கின்றார்; எனினும், இரக்கம் உகுத்துத் திரிவதே கலியுகக் கடமையெனக் கொள்ள மாட்டார். அறியாமையே ஆட்சிபுரிவதைக் காண்கின்றார்; எனினும், தாமறிந்ததைப் பழித்தகற்றி அவ்வரசிற்கு அவாவமாட்டார். பொதுஜன நலமெனும் பொய்வேடமே, புகழும் பொருளும் பெற்றுக்கொள்வதைக் காண்கின்றார்; கண்டபின்னும், உலகப் பழிப்பையும் உணங்கும் வறுமையையும் தாம் தாங்குவாரேயல்லாது அப் பொய்வேடத்தைத் தாம் ஒருபோதும் பூணமாட்டார். கடவுளைக் கைகூப்பித் தொழுவதால் மாநுட மானத்திற் கூனமுளதெனக் கழறுவார் குழு பெருகுவதைப் பார்க்கின்றாராயினும், அக்கடவுளின், கழல்களைப்பற்றிய தம் மிருகரங்களை நெகிழ்த்தமாட்டார்.

இன்னவர்க்குத் தன்னிலைநிற்கும் நன்னலம் எங்கிருந்து வாய்த்தது என்னில் எதிர்பகர்வதுஎளியதன்றெனினும், உண்மையெனும் படுகுழியை மெய்ம்மையெனும் திண்ணிய பாலத்தாற் கடக்கவல்லதோர் அருள்வாய்ந்த பாக்கியம் உடையவர் இவர் என உரைசெய்தல் ஒருவண்ணம் ஏற்புடைத்தாகும். அப்பாலந்தான் இவர்களை, வஞ்சனை பொறாமையொடு லோபமும் மதமும்நிலவுமிந்நிலவுலகக் காமத்தினின்று கரையேற்றி மனவுலகிற்கொண்டு சேர்க்கின்றது. இருக்கின்ற புன்மைகளை இகந்து, இருக்கவேண்டிய மெய்ம்மையின் தூய்மைதான் தோன்றி ஒளிருங்கால்

விளங்குகின்ற வாழ்க்கையே அம் மானத உலகினது மேன்மை. அவ்வாறு விளங்குகின்ற காட்சியை விழைகின்றார், சிறியன இறையும் புகாமல், வாய்மையே வழக்கமாய் ஈகையே இயற்கையாய், பொறுமையே உரிமையாய், கற்பே கைவந்த இன்பமாய், அன்பே அரசாய், கடவுளே பொருளாய், மாநுடர்க்கிடையே ஊடாடித் திகழ்கின்ற பாக்கியத்தை இம் மண்ணுலகம் பெற்றிலதென்னும் உண்மையினை உணர்ந்தபின்னும், கையறவும் கருத்தழிவும் இன்றியே தம் மனத்தினால் படைத்தமைத்துக்கொண்டவொரு இராச்சியத்திற்சென்று குடிபுகுகின்றார் பண்புடைய மக்கள் பலர். அத்துணைக்கு அத்துணை அவர்களது வாழ்க்கையுடன் அவர்தமைச் சார்ந்திருப்போர் வாழ்க்கையுந் தூய்மையடைகின்றது. இவ்விராச்சியத்திற்கு இடமும் இல்லை, எல்லையுமில்லை; சேர்வதே யல்லாமற் செல்கின்ற வழியுமில்லை. விழைவின் சித்திரமிது உலகப்போக்குவரவின் உண்மைக்கு முற்றிலும் மாறாயிருக்கின்றது; எனினும், ஈசன் எந்தை இணையடி நீழலை விழையக் கற்றவர், புல்லிய மாந்தரால் பொசுக்கப்பெறும் இவ்வையகச் செய்தியே மெய்ம்மையென மயங்கார். பொய்யென இதனைப் புதைத்துவிட்டுத் தம்மனம் நாடியது மாயம்போற் பிறர்க்குத் தோன்றுவதையும் பொருட்படுத்தாது அதுவலால் மெய்ம்மை பிறிதில்லை என்னத் தலைநிற்க உவந்து துணிகின்றனர். அருள் தோய்ந்த கருத்தினர், தம் விழைவின் சித்திரத்திற்கும் உலக இருப்பிற்கும் உள்ள முரண்களைக் காண்கின்றபோதெல்லாம், "இதுவென்ன இது! யாதோவொரு மாயை! இவ்வுண்மைதான் உலகத்தின் நிரந்தர மெய்ம்மையோ ஒருபோதும் ஆகாது. என்னுடைய மனமும் வாக்கும் காயமும், சிற்சிலபோதேனும் யான் விழைந்தெய்திய அச்சித்திர உலகின் தூய்மையை இந்நிலவுலகிலுங்கூடக் காட்டவில்லையோ! என்னளவு புண்ணியஞ் செய்தார் ஏனையவர் இல்லை என்று எண்ணுவேனோ! என்னைப் போல் பிறர் இல்லையோ; மற்று, இருக்கத்தான் இயலாதோ! சீ சீ! நான் உண்மையெனக் காணும் இப் புன்மையனைத்துங் கனவே. கருணையங்கடவுள் இக் கனவின் காட்சி காட்டுவதெல்லாம் எற்றுக்கோ என்பது யானறிகிலேனெனினும், காரணமின்றி யொன்றும் நிகழப்பெறாது," எனத் தன்னிலை தளராது நிற்கவே துணிந்தவராவார். இவ்வுலகினது இழிவின் உண்மையைக் காணக்காண அவர் மானத சித்திரத்தின் நிறமும் நேர்மையும் முதிருமேயல்லாது, "யான் மனத்தால் சமைத்துவைத்த அச்சித்திரமெல்லாம் பொய்யே—கெட்டேன்—இவ்வுலகத்தில் காண்கின்ற கோலமே உண்மை. அதனோடு இணங்கியே யான் இனி ஒழுகுவேனாகி, குடியரோடு குடித்து, கள்வரோடு களவாடி, காமுகரோடு போகம் நுகர்ந்து, மயக்கந் தெளிந்தெழுந்த என் மேன்மையையும் அறிவையும் இனிக் காட்டுகின்றேன் காண்" எனக் கழறிக் களிக்கமாட்டார்.

கடவுளருளினும், வானமாய் நின்று இன்பமழையாயிறங்கி அருட்டாக முடையோரை அவர் வாழ்விக்கும் வாய்மையினும், நம்பிக்கை இல்லாதான் சரித்திரமோ முற்றிலும் வேறாகி முடியும். அவ்விழிதகைமாக்களின் பிரதிநிதியாய்ப் பேசுகின்ற ஷாமல் ஹௌஸெனின் புன்மொழிகளைச் சென்றவாரம் வரைந்திருந்தோம். அதனைப் பின்வருவாறு மொழிபெயர்க்கலாம்:—

"மெய்ம்மை(Idealism)என்று யாதோவொரு போலிநம்பிக்கையைக் குறிப்பிட்டுத் தன் பிள்ளைமதியால் பெரிது மகிழ்கின்றான் மனிதன். உண்மையை(Reality)தன்னோடு ஒன்றாக்கிக்கொள்ள அவனுக்கு எளிதில் இயல்வதில்லை. இதன் காரணமும் இறுதியில் வெட்ட வெளியாயிற்று. மாறாட்டமும் குறைவும் தீமையுமே இவ்வுலகின் உண்மையாவது ஒருதலை. அவனுடைய பச்சைக்குழந்தை மனமோ, ஒற்றுமை முழுமை நன்மை என்னுமிவை மூன்றும் திரிமூர்த்திகளாய் உள்வாழ்க்கையை ஆள்கின்ற ஒரு தனிப் பிரபஞ்சத்தைச் சிருட்டித்து வைக்கின்றது. அம்மனிதன், தன் மனதமைத்த தனி உலகிற்கும், புறத்திருக்கும் உண்மையாய பொதுஉலகிற்கும் இடையே இகல்கின்ற முரண்கள் முன்தோன்றி எதிர்க்கின்ற காலத்தில், வெளிப்புறத்து உண்மையை மறுத்து, தன் அகத்தின்பால் நழுவிவிழுந்து ஒடுங்குகின்ற சுகத்தையும் உறுதியையும் முதலில் நாடிக்கொள்ளப் பார்க்கின்றான். மெய்ம்மைக்கும் உண்மைக்கும் இடையே இருந்த பழைய வேற்றுமை இப்பொழுது, சிறுபிள்ளைத்தனமான போலிநம்பிக்கைக்கும் முதிர்ந்த மதியினால் மயக்கறத் தெளிவதற்கும் இடையே விளைகின்ற ஓர் போராட்டமாய் மாறி முடிகின்றது. மாயையை ஏற்றுக்கொண்டு, மயக்கமில் தெருட்சியை மறுத்தும் அதற்குப் புறங்கொடுத்தும் ஓடுகின்றவோர் சுபாவம், வேடக்கூத்தை நம்பி விழைகின்ற சிறு பிள்ளைமதி மாநுட இயற்கையில் எவ்வளவு ஆழம் வேரூன்றி இருக்கின்றதென்பதை மாத்திரம் கண்டுகொண்டு விடுவோமாயின், இவ்விஷயத்தின் மூலத்தை நாம் நெருங்கினவர்களாவோம்—போலிவேடம் மனிதனது மனதிற்கு அமைதியளிப்பதாக, உண்மையோ அதனை உழக்குகின்றது".

ஆதலால், இந்த அமரிக்க ஆசிரியர்தம் அறிவின்படி, தெருண்ட மேலவர் எனத்தக்கவர் யாரெனின், "கடவுள், கருணை, என்பன வெல்லாம் பொய்; காமக்குரோத லோப மோக மத மாற்சரியாதிகளே மெய்; பொறைய யறிவு துறவு ஈகையாதிய போலிநம்பிக்கைகளைப் பிள்ளைப்பேதைமையால் பாராட்டியிருந்த சிறுமை நீங்கி இப்பொழுது உண்மையை உணர்ந்தவனாய் ஒழுகுவதே மாநுட இயற்கைக்கும் சுயமதிப்பிற்கும் ஏற்றவாறு ஒழுகியதாகும்" என்னுங் கொள்கையைக் கைக்கொண்டவர்களேயாவார் என்பது வெளிப்படை.

மெய்ம்மையை மறுத்து உண்மைக்கு முகங்கொடுப்பதால் விளையும் பொல்லாத தீமை இது. மனத்தின்கண் ஒவ்வொருபோதும் உதயமாகும் மெய்ம்மையின் தோற்றத்தை, மனப்பால் பருகலென்றும், ஆகாயக் கோட்டை கட்டலென்றும், பகற்கனாகாணலென்றும் பழித்தகற்றி நுண்ணறிவால் உலகத்தின் உண்மையை ஆராய்ந்தறிந்து அதற்கேற்றவாறு நம் வாழ்க்கையை வழிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று வாதிக்கும் ஷாமல்ஹௌஸன் போன்றவர் மேனாடுகளை எக்கதிக்குக் கொண்டுவந்து விட்டிருக்கின்றார்களென்னும் அவலச் செய்தியை அறையவும் வேண்டுமோ. கடவுள் நினைவும் கவிகள்தம் பொய்யாமொழிகளும் இவருடைய கொள்கைகளுக்கு விரோதமானவை. மற்று, அவரோ, தன் நூலினுள், கடவுளை மறுக்கின்றார், கவிகளை [illegible] வந்துற்ற தென்னற் க[illegible] இவைகளெல்லாம் [illegible]

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

24. யோகம்

[244-வது பக்கத் தொடர்ச்சி]

6. யோகமும் தேகமும்.

இருவகை யோகங்களுக்கும் முக்கியமான கருவி நல்ல தேகமாகும். பிணியின்றி, அல்வழக்கின்றி, சன்மார்க்கத்தில் ஒழுகுகின்ற தாய்தந்தையருக்குப் பிறந்த சற்புத்திரனே யோகத்திற்குப் பாத்திரனாவான். இவன் தக்க பழக்கங்களில் நிலைநின்ற சிறு பருவங் கடந்தபின் யௌவனத்தில் * யோகாப்பியாசத்தை மேற்கொள்வானாயின் வயதுமுதிருமுன்னரே இவனது எண்ணம் சித்திக்கு மென்பது திண்ணம்.

பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போற்பருவம்
பெற்றவர்க்கே நின்னருள்தான் பேறும் பராபரமே"

என்றார் தாயுமானார்.

ஹடயோகம், இராஜயோகம் என்னும் இருவகை யோகமார்க்கங்களுக்கும் அடிப்படைகளான நியமம் இயமம் என்பன பொதுவானவை. இவற்றிற்குத் தேகதிடம் இன்றியமையாததாகும். இக்கருத்தைத் தாயுமானவர் அடியில்வரும் செய்யுட்களிற் குறிப்பிடுவது காண்க:—

எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வமிக
அல்ல லென்றொருவர் பின்செலா
தில்லை யென்னுமுரை பேசிடா துலகில்
எவரு மாமென மதிக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்முதவி
நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிஷ்டை கூடவுமெந் நாளுமே

அறிவில் நின்றருகு வாயு ணர்த்தியது
மன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீருளை
ஐய ஐயவினி யென்சொல்கேன்
சிறிய னேழைநம தடிமை யென்றனது
திருவு ளத்தினி லிருந்ததோ?
தெரிவத தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே.

சிற்சுகோதய விலாசம் - 7.

பாகமோ பெறவுனைப் பாடவறி யேன்மல
பரிபாகம் வரவுமனதில்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப
தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ்
சிந்தியேன் பேரின்பமோ
சேரவென் றாற்கள்ள மனதுமோ மெத்தவும்
சிந்திக்கு தென்செய்குவேன்
மோகமோ மதமோ குரோதமோ லோபமோ
முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டெனைக் கொள்ளும் நிதியமோ தேடவெனின்
மூசுவரி வண்டுபோல
மாகமோ டவும்வல்லன் எனையாள வல்லையோ
வளமருவு தேவையரசே!
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெணுமையே.

மலைவளர் காதலி - 6.

எனவே யோக ஆரம்பத்திலே தேகதிடமின்றி நிற்போரும் ஒழுக்கவீன முடையோரும் எந்தவிதப் பயிற்சிக்கும் அதிகாரிக ளாகார். ஆசை மிகுதியால் யோகப்பயிற்சி செய்ய முயல்வாராயின் உயிருக்கே ஆபத்து வருமென்பது நிச்சயம். அரசனுக்கும் புண்ணியத்திற்கு மேலாம் புண்ணியம் யோகமார்க்கமெனின் நல்வினை எவ்வண்ண மிருக்கவேண்டுமென்பதைச் செவ்வனே அநுமானிக்கலாம்.

தேகத்திலுள்ள வினையைத் தீர்த்திடும்படி ஒரு வைத்தியன் மருந்து கொடுப்பானாகில், பத்தியம் யாது என்று கேட்பது உலகவழக்கம். சில வைத்தியர் கடும்பத்தியத்தில் பிணியாளனை வைப்பதுடன், பிணி நீங்கியபின்பு மறுபத்தியம் என்றும் கூறிச் சிலநாள் மருந்தில்லாமலே பத்திய மிருக்கவுஞ் செய்வார். சில வைத்தியர் "இச்சா பத்தியம்" என்று மற்றொருவகைப் பத்தியத்தில் வைப்பர்—இச்சாபத்தியம் என்பதின் பொருள் இச்சைப்பட்டதைக் கொள்வது என்று பொருள் தருமாயினும், மருந்தை முறிக்கத்தக்க கடுகு, நல்லெண்ணெய், பாவக்காய் முதலிய காய்கனிகளைக் கூடாதென்று தடுப்பதும் இப்பத்தியத்தின் இயல்பாகும். எப்பத்தியத்திலும் மருந்து உட்கொள்ளுங் காலத்தில் "ஸ்திரி பத்தியம்" என்னும் எச்சரிகை செய்வதுமுண்டு. * ஏனெனில் தேகத்தில் உண்டாகும் சுக்கிலம் ஒரு துளியானது இரத்தத் துளிகள் எழுபத்தொன்பதால் ஆக்கப்பட்டதென்றும், ஏகபத்தினி விரதனாயினும், "ஸ்திரி பத்தியம்" கவனியாதவனுக்கு மருந்து பலன் தக்கவாறு கொடாதென்பதும் ஆன்றோர் துணிவு †.

இவ்வாறு தேகவினை நீங்க இவ்வகைப் பத்தியங்களெனில் ஜன்மாந்திரங்கள் தோறும் தொடரும் ஊழ்வினை வேரறக் களைய மருந்தாகிய யோகமார்க்

---

*"இளைய காலமெ மானை யடைகிலாத்
துளையி லாச்செவி தொண்டர்கா ணும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைக ணைக் கருதிநீ ருய்ம்மினே.

திருவலஞ்சுழி - திருக்குறுந்தொகை 3.

* இடுகு நுண்ணிடை யேந்திள மென்முலை
வடிவின் மாதர் திறமனம் வையன்மின்
பொடிகொள் மேனியன் பூம்பொழிற் கச்சியுள்
அடிக ளெம்மை யருந்துயர் தீர்ப்பரே.

திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 10.

† "பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகண் மேவிப் பயனிலை பாவிகாள்!
அணுக வேண்டி லரநெறி யாவது
நணுக காத னகர்திரு நல்லமே"

திருநல்லம் - திருக்குறுந்தொகை 3.

கத்தில் இன்றியமையாத பத்தியம் "ஸ்திரீ பத்திய" மே. சுந்தரர்போலும், தாயுமானவர்போலும் உலக வாழ்க்கையைத் தடுக்கலாகாதென்று திருமணம் புணர்ந்தமகான்களும் நன்மனையாளுடனிருந்தும் இல் வாழ்க்கை அவர் விரும்பிய யோகநிலைக்கு இடையூறா யிருந்ததெனின் சாமான்னிய மனிதருக்குச் சொல்ல வும் வேண்டுமோ? ஆகையால் யோகமார்க்க சித்தி யடையக் கருதுவோர், திருநாவுக்கரசு மொழிந்தது போல்,

மட்டிட் டகுழ லார்சுழ லில்வலிப்
பட்டிட் டும்மயங் கிப்பரி யாதுநீர்
கட்டிட் டவினை போகக் கருவிலிக்
கொட்டிட் டையுறை வான்கழல் கூடுமே.
திருக்கருவிலி - திருக்குறுந்தொகை 1.

அருப்பு போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் லிட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலு மண்ணிக்கும் காண்மினே.
திருஅரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை 5.

கோல்லத் தானம ணர்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய லாவதே னேழைகாள்!
நல்லத் தானமை யாளுடை யான்கழல்
கொல்லத் தான்வல்லி ரேற்றுயர் தீருமே.
திருநல்லம் - திருக்குறுந்தொகை - 1.

எடுத்ததேகமானது வேண்டுங்காலம்வரையில் அழி யாது நிற்க அதைப் பலப்படுத்துவதற்கு வேண்டிய ஒழுக்கம் பிரமசாரியவொழுக்கமே யென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. சிவதன்மை வாய்ப்பதற் குச் சிவயோகம் வேண்டுமென்று எண்ணுவோன், சிவ னைப்போல் கருப்புவெஞ்சிலைக் காமனைக் காயவேண் டும். இன்றேல் இவ்வடிமை, அவ்வாண்டவனுக்குப் பொருந்தான். சிவயோகமும் அவன் கனவிலும் எண் ணலாகாது. ஆகையால் யௌவனபருவத்திலே சற்று இல்வாழ்க்கையி லிருந்தபின்னர் வாழ்க்கைத்துணைவி யுடனே அவ்வில்லத்திலே வெறிவேடமின்றி அகத் துறவுபூண்டு யோகாப்பியாசம் பயில்வார்களாயின் யாதொரு சலனமுமின்றி யோகசித்தி பெறலாகும். பரவைநாச்சியாருடன் சுந்தரர் வாழ்ந்த இல்வாழ்க்கை அவ்வாறேயாம்:—

ஊன்மிசையுதிரக்குப்பை யொருபொருளிலதாமாயம்
மான்மறித்தனையநோக்கி மடந்தையர்மதிக்குமிந்த
மானுடப்பிறவிவாழ்வுவாழ்வதோர்வாழ்வுவேண்டேன்
ஆனல்வெள்ளேற்றவாரூ ரப்பனேயஞ்சினேனே.

அறுபதும் பத்து மெட்டு மாறினோ டஞ்சு நான்கும்
துறுபறித்தனையநோக்கிச் சொல்லிற்றொன்றாகச் [சொல்லார்

நறுமலர்ப்பூவுநீரு நாடொறும்வணங்குவார்க்கு
அறிவினைக்கொடுக்குமாரூ ரப்பனேயஞ்சினேனே.
சுந்தரர் - திருவாரூர் - பண் - இந்தளம் 2 & 3.

இக்கருத்தை அப்பரும்,

வரையார் மடந்தை பங்கா கங்கை
மணவாளா! வார்சடையாய்! நின்ற னுமை
முரையா வுயிர்போகப் பெறுவே னாகி
லுறுநோய்வந்தெத்தனையு முற்றாலென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா வடியேனை யஞ்ச லென்னா
யாவடுதண் டுறையுறையு மமர ரேறே.
திருவாவடுதுறை - திருத்தாண்டகம் 3.

7. இயமமும் நியமமும்

அடயோகத்திற்கும் இராஜயோகத்திற்கும் இன்றி யமையாத அடிப்படைகள் இயமமும் நியமமுமாகும். அஷ்டாங்கயோகமாகியஇராஜயோகத்தில் இவைதாம் முதல் இரண்டு அங்கங்களாக எடுக்கப்பட்டன.

இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணா யாமநண் பிரத்தி (யாகாரம்)
சயமுறு தாரணை தியானஞ் சமாதி
பயமுறு மஷ்டாங்க மாவது மாமே.
திருமந்திரம்.

இயமமாவது:—கோல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர்போருளிச்சியாமை, இந்திரிய மடக்கு தல் என்னும் இவ் வைந்துமாம்.

கொல்லுதலென்பது பெருங்குற்ற மென்பது யாவருக்குந் தெரிந்ததே. மனிதன் மனிதனைக் கொன் றால், பழிக்குப்பழிவாங்கச் சட்டமுண்டு. சட்டங்கள் இராஜாங்கத்திலுளதேல், அதை யோம்ப நீதி வேண் டுவதில்லை. ஆயினும் ஆருயிர் நீங்கலாக ஏனைய உயிர் களையும் கொல்லலாகாதென்பதே ஆன்றோர் துணிவு,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்" என்றார் திருவள்ளுவர்.

கொலை செய்தவன் எய்திய பாவந்தீரப் பலநாளா கும். நரகத்திலும் அழுந்துவன். ஆனால்கொல்லப்பட்ட சீவன், கொன்றவன் புண்ணியத்தைக் கவர்ந்து மறு சன்மத்திற்குச் செல்லும். நமது தேகம் நிலையா யிரா தென்பது கண்டும் பிறதேகத்தை அழிக்கத் துணி வது பாவகாரியமாவதுடன் தவத்திற்கும் இடையூ றன்றோ?

தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் றானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே.
திருநல்லம் - திருக்குறுந்தொகை 4.

மெய்ம்மை கூறல், தவத்தொழிலுக்கு இன்றியமை யாதது. கல்விகற்கப் பாத்திரமில்லாதவர் "களி மடி மானி காமி கள்வன், பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன், துயில்வோன், மந்தன் றொன்னூற் கஞ் சித்தடுமாறுளத்தன், தறுகணன் பாவி, படிறன் இன் னோர்க்குப் பகரார் நூலே" என்றதில் படிறனைக் கடையில் காட்டியது விசேடமாயின், சாதார ணக் கல்வியிற் பல்லாயிர மடங்கு பயனை விளைவிக் கும் யோகநெறியில் பொய்ம்மை யாகா தென்பதற்குப் பிரமாணமும் வேண்டுவதில்லை. மெய்யராய் வாழ்ந் தாலன்றி இருளாகிய பொய்யை நீக்கி, வேதனை யென்னும் ஆழக்குழியினின்று ஏறி, சித்தசுத்தி பெறுவது இயலாது. இதை மூவர் மொழியாலும் காண்க:—

மெய்யராகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே! தேவர்குலக் கொழுந்தே!
நைவனாயே னுன்றனுமை நாளுநவிற் றுகின்றேன்
வையமுன்னே வந்துநல்காய் வலிவலமே யவனே!
சம்பந்தர்.

மெய்யன்ப ராளுர்க் கருளுங் கண்டேன்
வேடுவனாய் நின்ற நிலையுங் கண்டேன்
கையம் பரனெரித்த காட்சி கண்டேன்
கங்கணமுங் மங்கைக் கனலுங் கண்டேன்
ஐயம் பலவூர் திரியக் கண்டேன்
அன்றவன்றன் வேள்வி யழித்து கந்து
வையம் பரவ விருத்தல் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.
அப்பர்—திருவாய்மூர் - திருத்தாண்டகம் 9.

தன்னிலாசறு சித்தமு மின்றித்
தவமுயன் றவமாயின பேசிப்
பின்ன லார்ச்சடை கட்டியென் பணிந்தாற்
பெரிது நீந்துவ தறிந்து நிற்க
முன்னெ லாமுழு முதலென்று வானோர்
மூர்த்தியாகிய முதல்வன் றன்னைச்
செந்நெ லார்வயற் றிருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.
சுந்தரர்.

இனிக் கள்ளாமையும், பிறர்பொருள் இச்சியாமை யும், முறையே துற்செய்கையும் அதன் எண்ணமு மாம்:—

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
யரவாடச் சடைதாழ வங்கையி லனலேந்தி
யிரவாடும் பெருமானை யென்மனத்தே கண்டேனே.
திருவேகம்பம் - பண் - காந்தாரம் 1.

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ள மோன்றி யுள்குவா ருளத்துளா னுகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற் சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளனுரை யாரல் வாரு மந்தணாரு ரென்பதே.
சம்பந்தர்.

குற்றொருவரைக் கூறைகொண்டு
கோலைகள் சூழ்ந்த களவேலாம்
செற்றொருவரைச் செய்ததீமைக
ளிம்மையேவருந் திண்ணமே;
மற்றொருவரைப் பற்றிலேன்
மறவாதெழு மடநெஞ்சமே
புற்றரவுடைப் பெற்றமேறிப்
புறம்பயந்தொழப் போதுமே.
சுந்தரர்.

இப்பாசுரங்களால் கள்ளாமையும் பிறர்பொருள் இச்சியாமையும் யோகமார்க்கத்திற்கு இன்றியமையா தென்பதுவெளிப்படையாம். இப்பாவங்கள்இருக்கும் வரையில் மேலே ஏற வழியில்லையென்பது திண்ணம்.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[249-வது பக்கத் தொடர்ச்சி]

மூன்றாங் களம்

இடம்—பிஸாரோவின் கூடாரம்

[பிஸாரோ கோபத்துடன் சிந்தனையில் ஆழ்ந்து உலாவுகின்றான்]

பிஸாரோ:—நன்று, நன்று! ஒருவழி நில்லா அதிர்ஷ் டமே! என் நாசமே உன்பெருமையும் கீர்த்தியுமாகுக. இன்னுங்கூட எனக்கே நான் உண்மையாயிருப்பேன். என்னுயிர் போமுன் இப்பழிதீர்க்கும் காரியமாவது கைகூடும்படி சிறிதளவு மனமிளகி நீ கடைக்கண் ணளிக்க லாகாதா?—அதுவே அலான்ஸோவின் மர ணமா யிருக்கட்டும்.

[எல்விரா வருகின்றாள்]

யார் அங்கே! இங்குவரத் துணிந்ததார்? என்ன, வாயிற்காப்போனும் தனது கடமையை மறந்தானோ?

எல்விரா:—உன் சேவகன் தன்னா லானவளவு தடுத்துப் பார்த்தான் — ஆனா லவனுக்குத் தன் கடமை தெரிந்திருந்ததாற்றான் நான் மறுக்கும் போது அவன் தடுக்காமல் உள்ளே விட்டான்.

பிஸாரோ:—ஹாம் — உனக்கென்ன வேண்டும், இங்கே!

எல்விரா:—ஒரு வீரன் தனக்குற்ற துயரை எவ் விதம் பொறுக்கின்றானென்பதைப் பார்க்கவேண்டும். என்ன, பிஸாரோ, அமைதியா யில்லையே! எவ்வளவு மாறி—

பிஸாரோ:—என்ன! பகைமிகு பெருவியர்தம் கூரிலை வேல் நமது வீரர்களின் மார்பில் ஊடுருவிச் சென்ற தற்குக் களிப்புமிகக் கையாளச் சொல்கின்றாயோ? ஆகா! அதற்கு அப்பாதகன் அலான்ஸோவே கார ணம்.

எல்விரா:—இல்லை! புயலடித்துச் சென்றபின் குளிர்ந்துஇருண்டிருக்கும்இரவைப்போலும், பூகம்பத் திற்கு முன்னர்த் தோன்றும் கொடிய அமைதியைப் போலும், நீ கடுகடுத் திருப்பதுதான் நேர். ஆயினும் இருள்நீங்கிப் புதுநாள் பொழுதுபுலரும் என்பதை நீயுணர்ந்தறிதல் வேண்டும் என்பதே எனது விருப் பம்.—அப்பொழுது உங்கள் யுத்தாவேசம் தளிர்த் துக்கொள்ளட்டும்—வருவதற்குப் பயமாவது சென்ற தற்கு விசனமாவது வேண்டாம்.

பிஸாரோ:—மாதராய்! எல்விரா! எனது சேவகர் களுக்கெல்லாம் உனக்கிருக்கும் இவ்வீரம் ஏன் இல் லாமற் போய்விட்டது!

எல்விரா:—இருந்திருக்குமாயின் இன்றுனது பட் டாபிஷேக மன்றோ கொண்டாடியிருப்போம்.

பிஸாரோ:—எனதுயிருக்கும் கீர்த்திக்கும் களை யாய்க் கிளைத்திருக்கும் அவ் வலான்ஸோ நம் பகை

வரை நடத்தும்வரையில் எனக்கு விடியற்காலமென்பதொன்றில்லை.

எல்விரா:—பிஸாரோ! வீர! உன்னை நான் மேன்மேலும் சோதிக்க வந்திருக்கின்றேன்—இப்பொழுது உனது தீரத்தையன்று—உனது பெருந்தன்மையை—அலான்ஸோ இத்தருணம் உன் காவலாளர் கையிற் சிறைப்பட்டிருக்கின்றான்.

பிஸாரோ:—என்ன !

எல்விரா:—உண்மை இது! விலங்கிட் டிங்கே கொண்டுவருவதை வல்வெர்தே இப்போதுபார்த்தான். இச்செய்தியை யுனக்கு நானே சேர்ப்பிக்கலாமென்று வந்தேன்.

பிஸாரோ:—இவ் வதந்திக்காக — எல்விரா—நீ நீடூழி வாழ்க! அலான்ஸோ அகப்பட்டுக்கொண்டனன் என் கையில்—ஆயின் நானே விஜயன். வெற்றியும் எனதே.

எல்விரா:—பிஸாரோ! இவ் வநாகரிகக் குதூகலம் ஆண்மைக் கழகன்று. இதோ! பிஸாரோவையே நடுங்கச்செய்யும் கீர்த்தியும் ஆற்றலுமுடைய மனிதனொருவனை யான் காணற்குக் கொண்டிருக்கும் ஆவல் அதிகரிக்கின்றது. அவனது நாசத்திலா உனது வெற்றி! அவனது விலங்கிலா உன் காவல்?

பிஸாரோ:—காவற்சேவகா!

(சேவகன் வருகின்றான்)

சிறைப்பட்ட ஸ்பானியன் அலான்ஸோவை இழுத்து வா, கொண்டு வா அத்துரோகியை யிப்பொழுது.

(சேவகன் போகின்றான்)

எல்விரா:—அவன் கதி என்னவோ !

பிஸாரோ:—மரணம்! மரணம்! சித்திரவதை! பற்றியெரியும் என் கோபம் எவ்வளவுவித துன்பங்களைச் சூழ்ந்து செய்ய வல்லதோ—வாய்ப்பிராணன் போமளவு அவன் எவ்வளவு துன்பங்களைத் தாங்கலாமோ-அவ்வளவு சித்திரவதை!

எல்விரா:—வெட்கமில்லை யுனக்கு! அலான்ஸோவைக் கொலைசெய்வதற்கு முன்னாற் பிஸாரோவினால், பெருவியரை வெல்ல முடியவில்லை என்று சனங்கள் சொல்லவும் பொறுப்பாயோ?

பிஸாரோ :—எதை வேண்டுமெனினும் சொல்லிக்கொள்ளட்டும், போ! அவன்முடிவிற்கு முறியிட்டாய் விட்டது.

எல்விரா:—ஆயின் உன் சித்தம்போற் செய்: இது மாத்திரம் தெரியட்டும்—இவ்வீர வாலிபனின் இரத்தம் ஒருதுளி அநியாயமாய்ச் சிந்த நீ ஏதுவா யிருப்பாயாயின் எல்விராவை நீ யடியுட னிழந்தவனுவாய்.

பிஸாரோ:—இவ் வன்னியன்மீது உனக்கென்ன இவ்வளவு கருத்து. அலான்ஸோவின் கதியைப்பற்றி யுனக் காகவேண்டிய தென்னவோ?

எல்விரா:—அவன் கதியா லொன்றுமில்லை; உன் கீர்த்தியாலோ யாவும்! உன்புகழ்பெருமை,மானம் எல்லாவற்றையும் நீ ஒழித்தபின்னும் எனது காதல்மாத்திரம் உன்பால் நிலைக்குமென் றெண்ணுகின்றாயோ? நீ, என்னை உள்ளபடி அறியவில்லை.

பிஸாரோ:—என்னையும் நீ முன்னரே உள்ளபடி அறிந்திருக்க வேண்டும். ஒருதரம் பகையுறப் பண்ணிவிட்டால் பழிதீர்க்காது பிஸாரோவும் பொறுப்பனோவென்பது எல்விரா,உனக்குத் தெரியாமற் போயிற்று?

[சேவகன் அலான்ஸோவை விலங்கிட்டு இழுத்துவருகின்றான்]

வருக, வருக, அலான்ஸோ மகாபிரபு அவர்களே! நாம் சந்தித்து மிக்ககால மாகிவிட்டது. தங்கள் முகம் மிகச் செழுமையாய்த் தோற்றுகின்றதே! கிராமாந்தர வாசத்தினுலோ? யுத்த கஷ்ட நஷ்டக் கவலைகளின் நடுவில் இருந்தும் தாங்கள் பள்ளியறையினின்று வெளிவந்த மணவாளனைப் போலன்றோ காண்கின்றீர்! இதன் இரகசியத்தைச் சற்றே எனக்குச் சொல்லவேண்டும்.

அலான்ஸோ:—உனக்குச் சொல்லிப் பயனில்லை. யுத்த கஷ்ட நஷ்டங்கள் உண்டெனினும் இவ்விடத்தில் அல்லலில்லா அமைதியே என்றுங் குடிகொண்டிருக்கின்றது. (மார்பில் கை வைக்கிறான்)

பிஸாரோ:-ஏ, கயவா, நிந்திக்கின்றனையே என்னை நீ!

எல்விரா:—தக்கதே எய்தினாய்; விதிக்குடைந்து வேதனை யுற்றவர்பால் விளையாட வேண்டுமோ, பிஸாரோ !

பிஸாரோ:—உம்—கடிமணமும் முடிந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்; உம்—ஒரு அழகியகுழந்தை கூடப் பிறந்திருக்கின்றதாமே. தந்தையின் இராஜபக்தியையும், தாயின் மதக்கொள்கையையும் ஏற்றுக்கொள்வதற்காகவே போலும் அது பிறந்தது!

அலான்ஸோ:—ஆம்! தனது தந்தைக்கு, மோசம் கொடுமை வஞ்சனைகள்பா லுள்ள வெறுப்பிற்கும்; தனது தாயின் ஸத்யம், சாந்தம், கற்பிற்கும் பாத்திரனுகப் பிறந்திருக்கின்றான். பிஸாரோவின் கொடும் பகைக்கும் பாத்திரனவன் என்பதற்கு ஐயமில்லை.

பிஸாரோ:—உண்மையாகவா! பாவம், அப் பாலகனை நினைக்குங்கால் யான் மிக இரங்குகின்றேன். நாளைச் சூரியன் உதிக்குமுன் அக்குழந்தை உனக்கு ஈமக்கடன் செய்யவேண்டியிருக்கும். அலான்ஸோ, உன் காலம் குறுகிவிட்டது.

எல்விரா:—பிஸாரோ—இல்லை.

பிஸாரோ:—போ! போகாயேல் எனக்கு வரும் கோபம்—

எல்விரா:—நான் போகவுமாட்டேன் — உனக்கு வரப்போகின்ற அக் கோபத்திற்கு நான் அஞ்சவும் மாட்டேன்.

அலான்ஸோ:-தர்மவனிதாய்! வீணாக என்பொருட்டேன் மனம் இரங்குகின்றாய்! காலின்கீழ் இரையை அழுத்திநிற்கும் வேங்கைக் சோர் இடையூறுசெய்ய முயலாதே, அம்மா!

பிஸாரோ:—கலகக்காரா, என்ன செருக்கு உனக்கு. தெய்வப்பிரஷ்ட இராஜப்பிரஷ்டனாய உனக்கு—

அலான்ஸோ:—அது பொய்!

பிஸாரோ:—வேறென்னவோ நீ!உனது தேசத்தின் சைனியத்தை நீத்து நீ ஓட வில்லையா—அதுவும் அற்ப அஞ்ஞானிகளுடன் கூடி யுனது நாட்டிற்கே விரோதமாய்ப் போர்புரியவும் துணிந்தனையே!

அலான்ஸோ:—இல்லை! எவ்விதம் கைவிட்டோடினவனுவேன்? நான், திருடர்கள்—கடற் கொள்ளைக்காரர்கள்—கொலைபாதகர்கள் நடுவிற் பிறக்கவில்லையே! அச்சைனியம் பொற்பிசாசினாலும் உனது பேராசைப் பிசாசினாலும் தூண்டப்பட்டு மானுடதர்மத்தையும் தமது மேன்மையையும் அடியுடன் கைசோரவிட்டபொழுது நீங்களன்றோ என்னை விட்டோடியவர்களாவீர்! அதன் அதிகாரத்தை அபகரித்தவர்களுட னன்றி என் சுதேசத்திற்கு விரோதமாய்

நான் ஒருபோதும் கலகம் செய்யவில்லை. நியாயமும் நம்பிக்கையும் இரக்கமுமே நமது சின்னங்களாகத் தாங்கிச் சென்ற வரையில் நான் அவைகளைப் பின் தொடர்ந்தேன். இவைகளை வெறுத்துதைத் தெறிந்த பிறகு எனதென் றொரு நாடுமில்லை—என்மேல் எவ்விதக் குற்றமும் சுமத்த யாருக்கும் ஒரு அதிகாரமுமில்லை.

பிஸாரோ:—உன்னை விசாரித்துத் தண்டிக்கும் சக்தியாகிலு மிருக்கின்றதே!

அலான்ஸோ:—எனக்கு நியாயாதிபதிகள் எங்கே?

பிஸாரோ:—நீ யுத்தாலோசனைச் சபைக்கு மனுக்கொடுக்கின்றாயோ.

அலான்ஸோ:—ஆம். லஸ்கஸஸ் இன்னும் அவர்களுள் ஒருவரா யிருப்பாரானால். இல்லாவிட்டால் தெய்வத்திற்குத்தான் நான் மனுக்கொடுக்க வேண்டும்!

பிஸாரோ:—அசடன் லஸ்கஸஸை வஞ்சித்து விடலாமென்று பார்க்கின்றாய் போலும். ஆம். நீ செய்த இராஜத்துரோகத்திற்கு என்ன உத்தரம் சொல்லப் போகின்றாய்?

எல்விரா:—லஸ்கஸஸா அசடர்? அவரது ஹிதோபதேசம் உனது கன்மன விவேகத்திற் கவ்விதந்தான் தோன்றும். ஐயோ! அம்மகானது திவ்ய அசட்டுத்தனம் எனக்குச் சிறிதிருந்திருக்குமாயின் நான் இக்கதிக்கு வந்திருக்க மாட்டேனே!

அலான்ஸோ:—அவருக்காயின், உங்களருகிருந்து என்னைத் துரத்திய கொடுமைகளைப்பற்றி எடுத்துரைக்கவேண்டிய அவசியமில்லை. கைகோத்தழைத்துச் சென்று மானுடமுயற்சியின் பயனைப் வெட்டவெளிகளெல்லாம், நறுமணம் வீசும் நந்தவனமானதைக் காட்டுவேன். இது எனது செய்கை என்று சொல்வேன். பிறகு, கொடிய ஆசாரங்களும் மூடபக்தியும் அப்பேதையர் மனதை எவ்விதம் கலக்கி அவர்களைக் கெடுத்துவைத்திருந்த தென்பதைச் சொல்லி, இப்பொழுது எப்படி உண்மைச் சகோதரர்களாய் ஒன்றுசேர்ந்து கிராமங்கிராமமாய்க் கூடி, வேலையில் திருப்தியுடனும் விளையாட்டிற் சிரிப்புடனும் மிகமகிழ்ந்து வாழ்கின்றார் என்பதைக் காட்டுவேன். இதுவும் நான் செய்தததுதான். இவைகளன்றி மெல்லிய இன்சொற்களாலேயே, மெய்க்கடவுள் வழிபாட்டிற்குக் கொண்டுவரப்பட்டவர் களனேகர், வேலையும் விளையாட்டு மொழிந்த வேளையில், பக்தியொழுகும் கண்களுடன் கைகூப்பிப் பகவானைத் துதித்தலைக் காட்டுவேன். இதுவும் அலான்ஸோவின் வேலைதானென்று லஸ்கஸவிற்குச் சொல்லுவேன். உடனே லஸ்கஸஸ் தன் வயோதிகக் கைகள் இரண்டாலும் என்னைத் தழுவி ஆனந்தக்கண்ணீர் சொரிந்திடுவார். அத்திப்பிய துளியொன்று என்தலையில் வீழ்வதே, இவ்வுலகில் சத்தியம்பிறழாமல் நடந்தேன் என்பதற்கும், மறுமையில் கடவுளின் கிருபை எனக்குண்டென்பதற்கும் தவறாக் குறியாகும்.

எல்விரா:—அலான்ஸோ மகாபுருஷ! நீயன்றோ பாக்கியசாலி! பிஸாரோ, இத்தகைய எண்ணங்களும் அவைகளுக்கேற்ற செய்கைகளுமுள்ள ஒருவனைக் கொலைகொண்டு வெருட்டுகின்றனையே, ஒரு நீ!

பிஸாரோ:—என்ன வன்மம், என்ன துணிவு உனக்கு! உனது குருவராது கண்ணீர்மஞ்சனம் இங்கே உன்பொருட்டுக் காத்திருக்கவில்லை என்றறியாய் போலும். உன்னைப் போலவே அவனும் எங்களை விட்டோடிப்போயினன்—உன்னைப்போல் சத்துருக்களுடன் கூடிவிட்டான் என்பதற்கும் சந்தேகமில்லை. ஆயினும்,மறுமைபிலடையப்பயத்துடன்எதிர்பார்த்திருக்கும் வெகுமதி கிடைக்கின்றதா என்று நீ நினைத்திருப்பதைவிட மிக விரைவினில் சோதித்தறிய நேரிடுமென் றெண்ணுகிறேன்; ஏனெனில், நீ யுன்னாட்டிற் கிழைத்த பிழைக்காகவும் எனக்குண்டாக்கிய பகைக்காகவும் நாளைச் சூரியன் உன்னைச் சவமாகவே காண்பான்!

எல்விரா:—நில்! நில்! பிஸாரோ! ஒவ்வொரு வேளை நெறிபிறழ்ந்து நடந்தாலும், எக்காலத்திலும் கம்பீரமாகவே யாயினும் நடந்துகொள். நாட்டிற் கிழைத்த வசையைப்பற்றி யொருவார்த்தை பேசாதே. அதற்கும் இந்தக் கொடும்பகைச் செய்கைக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரிந்ததொன்றே. இவ்வாலிபன்மீது நீ கொண்டிருக்கும் கோபத்திற்குக் காரணம் அந்தரங்கப் பகையும், பழிதீர்க்கும் உனது இரத்தவெறியு மன்றி வேறொன்றுமன்று. அப்படியிருக்க—இரகசியம் வெளியாய்விட்டதென்று உனது மனச்சாக்ஷி, கண்கள் வழியாய்க் காட்டிக்கொடுத்துவிட்டதே—அப்படியிருக்க, நியாயத்தையும், நாட்டின் பெருமையையும் வீணே வழக்கிற்கழைத்து அவைகளை நிந்திப்பானேன். இவ்வீரன் கையிலும் வாளொன்று கொடுத்துச் சமநிலையில் தனிப்போர் புரிந்து உங்கள் பகையை முடித்துக்கொள்வதன்றோ ஆண்மை.

பிஸாரோ:—இராஜத்துரோகிக்குப் பரிந்துபேசும் பெண்ணிற் பெரும்பேதையே—வாயை மூடு! யாரடா அங்கே! இவ்விடம்விட் டகற்றிவனை. தன் தண்டனையின்னதென்ப தவனுக்குத் தெரியும்.

அலான்ஸோ:—பழிதீர்க்க வெகு ஆவலாயிருக்கின்றாய். அதற்காக அனேக வந்தனங்க ளுனக்கு — என்வரையில் உனது வேகமே என் அதிர்ஷ்டம் என்று சொல்ல வேண்டும். (எல்விராவைப் பார்த்து) வேதனை படுவோர்க்குப் பரிந்துபேசும் இனிய மாதே, அந்தியகாலத்தில் நான் மனப்பூர்வமா யளிக்கும் வந்தனத்தை அங்கீகரிப்பாயாக. அதோபார்—காட்டுமிராண்டிக ளென்றழைக்கப்படும் — அச்சனங்களுள் உனக்கு எவ்வளவோ இதமான நண்பர்கள் கிடைப்பார். இச் சகவாசம் உனக்குச் சற்றும் ஏற்றதன்று.

பிஸாரோ:—நின் சாவோலையைக் கோராவிற்குக் கொண்டுபோய்க் கொடுக்க இவளையே அனுப்புவேன்.

அலான்ஸோ:—மனிதத்தன மற்ற பாதகா! இவ்வொரு பாணத்தையாயினும் என் மார்மீது எய்யாமலிருக்கலாம் நீ; ஆயினும் உனது குரூரங்கூட என் மனவமைதியைக் கலக்காது. நான் சாகப்போகின்றேன்—என் ஞாபகத்தை எல்லோரும் வாழ்த்துவார்களே யன்றிச் சபிப்பார் ஒருவருமில்லை. நீயோ உயிருடனிருப்பாய்—ஆனால் நீ எப்பொழுதும்- பிஸாரோதானே.

(காவலருடன் போய்விடுகின்றான்)

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[250-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

118. புரிசை நீண்மதிற் போதன மாநக
ரரசர் வார்த்தையவ் வாறது நிற்கவே
விரைசெய் வார்பொழில் விஞ்சையர் சேடிமே
லுரையை யாமுரைப் பானுற நின்றதே. 1.

புரிசை நீள் மதில் - நீண்ட மதிலையுடைய, போதனம் மா நகர்- போதனம் என்னும் பெரிய நகரத்தின், அரசர் - அரசராகிய பயாபதி வேந்தரது, வார்த்தை-மொழிகள், அவ்வாறு-(துருமகாந்தன் சென்று புட்பமாகாண்டம் என்னும் சோலையைக் காத்திருக்கட்டும்) என்னும் அவ்வாறு ஆயின. அது நிற்க - அது நிற்க, (இனி)விரைசெய்-வாசனை கமழ்கின்ற, வார்பொழில்—நீண்ட சோலையையுடைய, விஞ்சையர் சேடிமேல் - வித்யாதரர் நாட்டில் நிகழ்ந்த, உரையை - செய்தியை, யாம் - (கவியாகிய) நான், உரைப்பான்-உரைப்பதற்கு, உறநின்றது - மிகவும் இருக்கின்றது.

இரதநூபுரம், என்பது வித்தியாதர நகரத்தின் பெயர். இப்படலம் அங்கு நிகழ்ந்த செய்தியைக் கூறுவது. அது அவ்வாறாக,இனி வித்தியாதரநாட்டில் நிகழ்ந்ததைச் செப்புவோம், என்று கவி இப்படலத்தைத் துவக்குகின்றார். புரிசை, என்பதற்கே மதில் என்பது பொருள். ஒரு பொருளுடைய இரண்டு சொற்கள் செய்யுள்களில் அடுத்து வருவதுண்டு. சேடி - வித்தியாதரர் உலகம். நூற்றுப்பத்து நகரங்களுடைய இந்நாடு வெள்ளிமலையின் தென்புறத்தில் உளதென்பர். நிற்கவே, நின்றதே என்பவைகளிலுள்ள ஏகாரங்கள் அசைகள். யாம், என்பது கவிகள் ஆசிரியர் அரசர் முதலிய சில உயர்தரத்தினோர்க்குரிய வோர் தனித் தன்மைப்பன்மை. உற—மிகுதிப்பொருளுடைய வொரு உரிச்சொல்.

---

119. நிலவு வெண்சுடர் பாய்நில மொப்பநீண்
டுலவு நீள்கட றீண்டி யுயர்ந்துபோ
யிலகு வின்மணி வானியன் மாடெலாம்
விலக நின்றது விஞ்சையர் குன்றமே. 2.

விஞ்சையர் குன்றம் - வித்யாதரர் வசிக்கின்ற (விஜயார்த்த பர்வதம் என்னும்) மலையானது, நிலவு - சந்திரனது, வெள்சுடர்-வெண்மையான ஒளி, பாய் - பரவியிருக்கின்ற, நிலம் ஒப்ப - தரையை ஒத்ததாகி, நீண்டு உலவு நீள் கடல் தீண்டி - நீண்டு உலவுகின்ற பெரிய கடலை(கீழே)தீண்டி, உயர்ந்துபோய்- (மேலே) உயர்ந்து வளர்ந்து, இலகு - பொலிகின்ற, வில் - ஒளியையுடைய, மணி- அழகிய, வான் இயல் மாடு எலாம்- ஆகாயத்தைச் சார்ந்த இடங்களெல்லாம், விலக - ஒதுங்கும்படி, நின்றது - நிமிர்ந்திருந்தது.

வெள்ளிமலையாதலால், நிலவு படர்ந்த தரையை ஒத்தது. அடியில் கடலைச்சார்ந்து, வானுலகத்தையும் பிரிக்கும்படி உயர்ந்து வளர்ந்திருந்தது அம்மலை என்பது கருத்து. ஒப்பவும், தீண்டியும், விலகவும் நின்றது—எனக் கூட்டிக்கொள்க.

---

120. தொக்க வானவர் சூழ்குழ லாரொடு
மொக்க வாங்குள ராய்விளை யாடலா
லுக்க சோதிகள் சோலையி னூடெலாஞ்
செக்கர் வானக முஞ்சிறி தொக்குமே. 3.

தொக்க - (அம்மலையின்கண் வந்து)சேர்ந்த, வானவர் - தேவர்கள், சூழ்குழலாரொடும் - சுருண்ட கூந்தலையுடைய தேவமாதர்களோடு, ஆங்கு உளராய் - அங்குத் தங்கினவர்களாய், ஒக்க -மனமொத்து, விளையாடலால் - விளையாடிக்கொண்டிருத்தலால், சோதிகள் - (அவர்களது சரீரங்களினின்று) ஒளிகள், உக்க- உதிர்ந்தன. (அதனால்) சோலையின் ஊடு எலாம்- (அங்கிருந்த) சோலைகளின் உட்பக்கங்கள் எல்லாம், செக்கர் வானகமும் சிறிது ஒக்கும் - ஒருவாறு செவ்வானத்தையும் ஒத்திருக்கும்.

மாலைக்காலத்தில் கருமேகத்தினூடு சூரியனொளி பாய்வதால் தோன்றுகின்ற செவ்வானம்போல், கருத்திருண்ட சோலைகள், தேவர்களது மேனியின் ஒளி பாய்ந்ததால் தோன்றியது என்பது இதன் பொருள். வானகமும், என்பதிலுள்ள உம்மையை உயர்வுசிறப்பும்மை என்று கொள்ளல்வேண்டும். வானகத்துறை தேவர்களும் இவ் வித்யாதாரர் சேடியின் அழகை விரும்பி இங்கு விளையாட வந்தார்.

---

121. அவிழுங் காதல ராயர மங்கையர்
பவழ வாயமு தம்பரு கிக்களி
தவழு மென்முலை புல்லத் ததைந்ததார்
கமழ நின்றன கற்பகச் சோலையே. 4.

அவிழும் - மலர்கின்ற, காதலர் ஆய் -காதலை உடையவர்களாகி, அரமங்கையர் - தெய்வமாதர்களது,' பவழம் - பவழம்போன்ற, வாய் - அதரங்களினின்று வரும், அமுதம் பருகி - அமுதத்தை அருந்தி, களி தவழும் - களிப்புஊரும், மெல் முலை - அவர்களது மெல்லிய முலைகளை, புல்ல - அணைத்துக் கொள்ளவும், (அதனால்) ததைந்த - அழுந்திய, தார் - அவர்களது மாலையினின்று பரவிய நறுமணம்சேர்ந்து, கமழ- கமழும்படி, கற்பகச் சோலை - தேவலோகத்திலுள்ள கற்பகச் சோலைகள், நின்றன - ஆயின.

இந்தச் சேடியிலுள்ள சோலைகளுக்கு வந்து விளையாடிய தேவர்கள் தங்கள் மங்கையர்களை நெருங்கப் புல்லிக்கொள்வதால் அவர்களது மாலைகளினின்று கழன்ற நறுமணம் விண்ணுடுவரையில் எட்டி அங்குக் கற்பகச்சோலையின் மணமும் மறையும்படி அதனிலும் அதிகமாய்க் கமழ்ந்தது என்பது இச்செய்யுளின் கருத்து. ஒரு நாட்டினை வர்ணிக்கும் கவிகள், அதன்கண் உள்ள ஒரு திணையின் பொருளும் நிகழ்ச்சியும் மற்றொரு திணையைச் சார்ந்ததாகத் தொடர்புபடுத்துமாற்றால் திணைமயக்கங் கூறுவார். "குறிஞ்சிமலர் இடைச்சியர் கூந்தலுட் கமழும், மருதத்தினின்று களைஎறி குவளை நெய்தல்நிலத்து மாதர்களின் கூந்தலுக்குள் தோன்றும்" என இந்த

நூலின்கண் முன் (32-வது செய்யுள், 46-வது பக்கம்) வந்திருப்பது திணைமயக்கத்திற் குதாரணமாகும்.

குரும்பை மென்முலை தோன்றுமுன்
பாளையங் குரூஉத்துகின் மிசைபோர்த்திட்
டரும்பி முன்வரு காலது
நீவுவ தழகெனப் புறவத்து
விரும்பு முல்லைகள் சிரிப்பநீர்ப்
பழனத்து விறந்தநெட் டிலைத்தெங்கு
பெரும்ப ழங்களாற் றளவினைச்
சிதைத்திடும் பிணக்குள தொருபாங்கர்.

எனத் தணிகைபுராணத்தின்கண் தொண்டைநாட்டினில் திணைமயக்கம் பாடினார் கச்சியப்ப முனிவர். குரும்பைகளாகிய மெல்லிய முலைகள் தோன்றுமுன், பாளையாகிய அழகிய நிறமமைந்த துகிலால் போர்த்தி வைத்துப் பிறகு அக் குரும்பைதான் அரும்பி வெளிவருங் காலத்தில் அப்பாளையாகிய துகிலைவிலக்கி விடும் இச்செய்தி மிக அழகிது என்று மருதநிலத்திலுள்ள தென்னைமரங்களைப் பரிகசித்து, முல்லை நிலத்திலுள்ள விரும்பத்தக்க முல்லை மலர்கள் சிரிப்பனபோல் மலர, நீர் நிறைந்த வயல்களைச் சூழ்ந்து அடர்ந்த நீண்ட இலைகளையுடைய தென்னைமரம், தன் பெரிய பழங்களை உதிர்த்து அம் முல்லைச் செடியை அழித்துவிடும் மாறுபாடு அத்தொண்டை நாட்டின் ஒரு பக்கத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது—என்பது இச்செய்யுளின் பொருள். முலைபரும்பாச் சிறுமிகட்கு மேலாடை வேண்டா ; அது திரண்டரும்பும் போதுதான் உத்தராசங்க மிட்டு ஒளித்தல் வேண்டும். தென்னையோ, இதற்கு எதிராக, குரும்பையாகிய முலைகள் அரும்புமுன் பாளையால் போர்த்திருந்து, அரும்பியபின் திறந்துவிடுகின்ற விபரீதத்தைப் பரிகசித்துச் சிரித்தனபோல் முல்லைக் கொடிகள் முல்லைநிலத்தில் அரும்பினவாம். இவ்வாறு பரிகசிக்கும் முல்லையை வெகுண்ட தென்னை மரம் அதன்மேல் தன் பழங்களை வீழ்த்திச் சிதைத்துப் பழிதீர்த்துக் கொண்டதாம். இப்படி முல்லை மருதம் என்னும் இரு திணைகளை மயங்கவைத்தார் அப்புலவர்.

சேடியை இங்கு வர்ணிக்கவந்த தோலாமொழித் தேவர், இச்செய்யுளில், வித்யாதர உலகத்திலிருந்து எழுந்த வாசனை தேவலோகக் கற்பகச்சோலையைக் கதுவிற்று என அவை யிரண்டையுந் தொடர்பு படுத்துகின்றார். ஒரு தேசத்தின்கண்ணுள்ள நான்கு திணைகளுக்கிடையே தொடர்பு புரிவதே திணைமயக்கம் என்னலாகும். ஆதலால், இருவேறு உலகங்களுக்கிடைமயங்கும் இதனைத் திணைமயக்கம் என்பதற்கில்லை. ஒருகால், உலகமயக்கம் என உரைக்கலாம் போலும்.

அரும்பித் திரண்டு மணத்தொடு சேர்வதால், காதலும் மலர்போல் அவிழ்வதாய்க் கூறும் சூழ்ச்சி சாலப் பொருந்தும்.

---

122. கிளருஞ் சூழொளிக் கின்னர தேவர்தம்
வளரும் பூண்முலை யாரொடு வைகலாற்
றுளருஞ் சந்தனச் சோலைக ளூடெலா
நளிருந் தெய்வ நறுங்குளிர் நாற்றமே. 5.

கிளரும் - பொலிவுடையதாய், சூழ் - தம்மைச் சூழ்ந்திருக்கின்ற, ஒளி - ஒளியை உடைய, கின்னர தேவர் - கின்னரர் என்னப்படும் தேவசாதியார், தம் - தங்களது, வளரும் - பருக்கின்றனவாகி, பூண் - ஆபரணங்களை அணிந்த, முலையாரொடு - முலைகளையுடைய மாதர்களோடு, வைகலால் - தங்குவதால், துளரும் - ஒலிக்கின்ற, சந்தனச் சோலைகள் ஊடெலாம் - சந்தனச் சோலைகளின் நடுவில் எல்லாம், தெய்வ நறும் குளிர் நாற்றம் - தெய்வத் தன்மை பொருந்திய குளிர்ந்த நறுமணம், நளிரும் - செறிந்திருக்கும்.

நளிதல் என்பதற்குச் செறிதல் என்னும் பொருளிருத்தலை, "நளிந்து பலர் வழங்காச் செப்பம்......" என மலைபடிகடாத்தில் வந்திருப்பதாலு மறியலாம்.

---

123. மங்குல் வாடைவந் தார்வன மீதுழாய்ப்
பொங்கு தாதொடு பூமதுக் கொப்பளித்
தங்க ராகம ளாயர மங்கையர்
கொங்கை வாரிகள் மேற்குதி கொள்ளுமே. 6.

மங்குல்-ஆகாயத்தில் வீசும், வாடைவந்து-வாடைக் காற்று வந்து, ஆர் வனம் மீது - சந்தனச்சோலையின் மீது, உழாய் - உழுது, பொங்கு - எழுகின்ற, தாது ஒடு - மகரந்தப் பொடியோடு, பூமது - பூந்தேனையும், கொப்பளித்து - வெளிப்படுத்தி, அங்கராகம் - பரிமளக் குழம்பை, அளாய - பூசிய, அரமங்கையர் - தேவகன்னியர்களது, கொங்கை - முலைகளாகிய, வாரிகள்மேல் - யானை படுக்கும் இடங்களில், குதிகொள்ளும் - குதிக்கலாகும்.

வாடை...........குதிகொள்ளும், எனக் கூட்டிக் கொள்க. மங்குல், என்பதற்கு 'இரவு' எனவும் பொருள் கொள்ளலாம். ஆரம் - சந்தனம்; அதன் ஈற்று 'அம்' குறைந்து 'ஆர்' என இங்கு நின்றது. உழுது, என்பதன் மருவு உழாய். வாரி - யானையைப் பிடிக்கும் இடம். யானைகள் போன்ற ஆடவர்களைத் தம்மிடம் வந்து விழச்செய்வதால், கொங்கைகளை இங்கு 'வாரி' என்றார்.

---

124. தேன கத்துறை யுஞ்செழுஞ் சந்தனக்
கான கத்தழை யின்கமழ் சேக்கைமே
லூன கத்தவர் போகமு வந்தரோ
வான கத்தவர் வைகிய வைகலே. 7.

அகத்து - தன்னிடத்தில், தேன் - வண்டுகள், உறையும் - தங்கப்பெற்ற, செழும் - செழுமையான, சந்தனக் கானகம் - சந்தனக் காட்டின்கண், தழையின் - தளிர்களாலாகிய, கமழ் - வாசனையுடைய, சேக்கைமேல் - படுக்கையில், வான் அகத்தவர் - விண்ணுலக தேவர்கள் வந்து, வைகிய - தங்கிய, வைகல் - தங்கலானது, ஊன் அகத்தவர் - மாநுடர்களது, போகம் - போகத்தை, உவந்து - விரும்பியே — (அரோ - அசை)

ஊன்கணார் முதலிய தொடர்கள் மாநுடர்களைக் குறிப்பவைகளாய் இலக்கியங்களிற் பயின்று வருவதால், ஊனகத்தவர் போகம், என்பதற்கு இங்கு மனிதர்களுக்கு உரிய போகம், எனப் பொருள்கண்டோம்.

---

125. மஞ்சு தோய்வரை மைந்தரொ டாடிய
வஞ்சி லோதிய ராரள கப்பொடி
பஞ்ச ராகம் பதித்த பளிக்கறை
துஞ்சு பாறைகள் மேற்றுதை வுற்றதே. 8.

மஞ்சு - மேகங்கள், தோய் - படிகின்ற, வரை - அம்மலையில், மைந்தரொடு - ஆடவர்களுடன், ஆடிய- விளையாடிய, அம்சில் ஓதியர் - அழகிய மெல்லிய கூந்தலையுடைய மாதர்களது, ஆர் - நிறைந்த, அளகம் பொடி - கூந்தலிலணிந்த மலர்களிலிருந்து உதிர்ந்த மகரந்தப்பொடி, பஞ்ச அராகம் பதித்த - ஐந்துவித பொன் தகடுகளும் பதித்த, பளிக்கு அறை - பளிங்கினாற் செய்த அறையில், துஞ்சு - (அம்மாதர்) துயில் கொள்கின்ற, பாறைகள்மேல் - பாறைகளின்மேல், துதைவு உற்றது - அடர்ந்திருந்தது.

வரையில், ஓதியர் அளகப்பொடி, பளிக்கறையில் பாறைகள்மேல் துதைவுற்றது எனக்கூட்டிக்கொள்க.

---

126. மாத ரார்நடை கற்கிய வானிழிந்
தூது வண்டுண வூழடி வூன்றிய
பாத ராகம் பதித்த பளிக்கறை
காத லார்தம் கண்கவர் கின்றதே. 9.

நடை கற்கிய - (இங்குள்ள வித்தியாதர மாதர்களது) நடையைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு, வான் இழிந்து - தேவலோகத்திலிருந்து இறங்கி வந்து, ஊது - ஊதுகின்ற, வண்டு - வண்டுகள், உண - மொய்க்கும்படி, ஊழ் - முறையாக, அடி ஊன்றிய - அடிவைத்து நடக்கின்ற, பாதம் ராகம் - பாதங்களின் சிவப்பு, பதித்த - பதிந்திருக்கின்ற, பளிங்கு அறை - பளிங்குப் பாறையானது, காதலார் தம் - காதலர்களுடைய, கண் கவர்கின்றது - கண்களைக் கவர்கின்றது.

பளிங்குப் பாறையில் பதிந்த மாதர்களது செம்பஞ் சூட்டிய பாதச்சுவடுகளைத் தெண்ணீரில் அலர்ந்த தாமரைமலர்களென வண்டுகள் மயங்கி மொய்க்கும். அப்பாறைகள் காதலார் கண்களைக் கவர்கின்றன.

அறை, என்பதற்கு, சிற்றில் (room) பாறை, என இரு பொருள்கள் உள. முன் செய்யுளில் பளிக்கறை- பளிங்கினாலான சிற்றில்; இச்செய்யுளில், பளிக்கறை - பளிங்குப்பாறை.

---

127. ஆகு பொன்னறை மேலரு வித்திரள்
நாக கன்னிய ராடலின் ஞால்கைம்மா
வேக மும்மத வெள்ள மளாவிய
போக மல்லிகை நாறும் புனல்களே. 10.

பொன் ஆகு அறைமேல் - பொன்னாலாகிய பாறைகளின் மேல், அருவி திரள் - அருவி வீழ்ச்சிகளில், நாக கன்னியர் ஆடலின் - நாக கன்னியர் நீராடுவதால், புனல்கள் - (அம்மலைக்கணுள்ள) நீரோடைகள், ஞால் கை மா - தொங்குகின்ற துதிக்கையையுடைய யானையின், வேகம் மும்மதம் வெள்ளம் - வேகமுடைய மூன்று மதநீர்கள், அளாவிய - கலந்திருந்த நாற்றமானது, போக - நீங்கிவிட, மல்லிகை நாறும் - மல்லிகை மணத்தை வீசும்.

யானையின் மதநீர்நாற்றம் வீசவேண்டி புனல்கள் அதுமாறி, நாககன்னியர்கள் ஆடியதால் அவர்களது இயற்கை மணங் கலந்து கமழும் என்பது கருத்து.

---

128 பூக்க ளாவன பொன்மரை பூம்பொழிற்
காக்க ளாவன கற்பகச் சோலைகள்
வீக்கு வார்கழல் விஞ்சையர் சேடிமே
லூக்கி யாமுரைக் கின்றதிங் கென்கொலோ. 11.

பூக்கள் ஆவன - (அம்மலையிலுள்ள) மலர்கள் ஆவன, பொன் மரை - பொன்தாமரை மலர்களே. பூம் பொழில் காக்கள் ஆவன - அழகிய சோலைகள் ஆவன, கற்பகம் சோலைகள் - கற்பகச்சோலைகளே. (எனின்), வீக்கு - காட்டிய, வார் - நீண்ட, கழல் - வீரக்கழலை அணிந்த, விஞ்சையர் சேடிமேல் - அந்த வித்தியாதர உலகைப்பற்றி, யாம் - (கவியாகிய) நான், ஊக்கி - முயன்று, இங்கு உரைக்கின்றது - இங்குச் சொல்ல வேண்டியது, என்கொல் ஓ - வேறுயாதோ -

பொழில், கா, ஒருபொருள்மேல் இரு மொழிகள். அல்லது, பொழில் என்பதற்குப் பெருமை என்ற பொருளும் இருத்தலால், பெருமையுடைய சோலைகள், என்றும் பொருள் கொள்ளலாம்.

---

129. வரைமின் மேன்மதி கோடுற வைகிய
திருவ நீளொளித் தென்றிசைச் சேடிமே
லிரத நூபுரச் சக்கர வாளமென்
றுரைசெய்பொன்னகரொன்றுளதென்பவே. 12.

வரை - (அம்மலையில் வீசுகின்ற) மின்மேல் - மின்னலுக்குமேல் செல்லும், மதி - சந்திரன், கோடுஉற- வளைவு அடையும்படி, வைகிய - இருந்த அந்த, திருவ - அழகிய, நீள் ஒளி - மிகுந்த ஒளியையுடைய, தென்திசைச் சேடிமேல் - சேடியின் தென்திசையில், இரதநூபுரச் சக்கரவாளம் என்று - இரதநூபுரச் சக்கரவாளமென்று, உரைசெய் - சொல்லப்படுகின்ற, பொன்நகர் ஒன்று - பொன்மயமான நகரம் ஒன்று, உளது என்ப - உண்டு என்று சொல்வார்.

சந்திரனை வளையும்படி தேய்த்துவிடுகின்ற அவ்வளவு உயரமானது அம்மலை என்பது முதலடியின் கருத்து.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
SOLE AGENTS THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:
டிப்போ, பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA NANJANGUD
மதுரை காஞ்சீபுரம்.

யாப்பிலக்கணம்

தளை

[253-வது பக்கத் தொடர்ச்சி]

அடி.

அசைகள்சேர்ந்துசீர்களாமாறும்,சீர்கள்தொடர்ந்து தளைகளாமாறுங் கண்டோம். இனி அத்தளைகளால் ஆகின்ற அடியின் இலக்கணத்தை ஆராய்வோம்.

குறைந்தது இரண்டு சீர்களேனும் இல்லாமல் ஒரு செய்யுளடி ஆக இயலாது. இரண்டு சீர்கள்முதல், பதினறு சீர்கள் வரையில் வருகின்ற அடிகளைச் செய்யுள்களில் காணலாம். சீர்களின் கணக்கிற்குத் தக்கபடி செய்யுளடிகள் வெவ்வேறு பேர்கள் பெறுகின்றன:—

1. இரண்டு சீர்கள் உள்ளது—குறளடி (குறள் + அடி)
2. மூன்று சீர்கள் உள்ளது—சிந்தடி (சிந்து + அடி)
3. நான்கு சீர்கள் உள்ளது--அளவடி அல்லது நேரடி. (அளவு + அடி); (நேர் + அடி)
4. ஐந்து சீர்கள் உள்ளது--நெடிலடி (நெடில் + அடி)
5. ஆறு சீர்முதல், 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 சீர்கள் வரையில் உள்ளது—கழிநெடிலடி.

இக் கழிநெடிலடிகளில், எட்டுச் சீர்களுக்கு மேற்பட்ட அடிகளைச் செய்யுள்நயம் உயர்ந்தோர் பாராட்டுவதில்லை. அதுவும் பத்து சீர்களுக்கு மேற்பட்ட அடிகள் விரும்பத்தக்கன அல்ல. ஆகையால், 6, 7, 8, சீர்கள் உள்ள அடிகளைக் கழிநெடிலடி யென்றும், 9, 10 சீர்கள் உள்ள அடிகளை இடையாகு கழிநெடிலடிகளென்றும், 11 முதல் 16 சீர்கள்வரையில்உள்ள அடிகளைக் கடையாகு கழிநெடிலடி யென்றும், வழங்குவது முண்டு.

ஐந்து சீர்கள் உள்ள அடிக்கு நெடிலடி என்னும் பெயர் அமையும்; ஆதலால் அவ்வைந்திற்கு மேற்பட்ட சீர்களுடைய அடிகளை யெல்லாம் கழிநெடிலடி எனத் தொகுத்துக் கூறினர். கழிஎன்பது மிகுதிப் பொருளைக் குறிக்கும் ஒரு உரிச்சொல்.

(1) குறளடி:—(இரண்டுசீர்)

நாடீர் நாடோறும்
வாடா மலர்கொண்டு
பாடீ ரவன்நாமம்
வீடே பெறலாமே.

என்னும் திருவாய்மொழிப் பாசுரம், அடிதோறும் இரண்டு சீர்களுடைய குறளடிகளால் ஆய நான்கு அடிகள் கொண்ட வஞ்சித்துறை.

நகர மாய்மறைச்
சிகர மானதா
லகர மாயினு
னிகரில் காசியே.

என்னும் காசிக்கலம்பகச் செய்யுளும் குறளடிகளால் ஆயது.

(2) சிந்தடி:—(மூன்று சீர்கள்)

அன்று மூல மாதியாய்
இன்று காறு மேழையேன்
நன்று தீது நாடலேன்
தின்று தீய தேடினேன்.

என்னுமிக் கம்பராமாயணச் செய்யுள் மூன்று சீர்கள்கொண்ட சிந்தடிகள் நான்கினுல் அமைந்த வஞ்சி விருத்தம்.

அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பறையன் பாவை—பெருமான்
அணியாக மாரத் தழுவினுள் தான்முன்
தணியாத வூடல் தணிந்து.

[அருவிகளையுடைய கைலாயமலையை இராவணன் பெயர்த்தெடுக்க, அச்சமுற்ற பார்வதி தேவி, தான் முன் தணியாத ஊடல் தணிந்து சிவபிரானது அழகிய மார்பை முழுவதும் தழுவினுள்]

என்னுமிச் செய்யுளில், 'தணியாத வூடல் தணிந்து' என்னும் ஈற்றடி மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாகும். வெண்பாவின் ஈற்றடி யெல்லாம் எப்பொழுதும் சிந்தடியாகவே நிற்கும்.

அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயின்
என்பயஞ் செய்யுமோ வேலற்கவ் வெறியே.

[தலைமகனோடு களவொழுக்கம் பூண்டுள மகளின் உடல் வேறுபாட்டைக் கண்டு கலங்கிய அவள் தாய் காரணமறியாமல், வேலனைக் கொண்டு வெறியாட்டுவிக்கக் கருதியிருந்ததை அறிந்த தோழி உண்மையை மெல்ல வெளிப்படுத்தி அவ்வெறியாடலைத் தடுக்கும் சூழ்ச்சியினளாய், தாயின் காதிற் படும்படி தன் தலைவிக்குச் சொல்லிய ஐங்குறு நூற்றுப் பாட்டிது. இதன் பொருள்—தோழி நீ வாழ்வாயாக, என்ன விந்தையிது; பல மலர்களோடு கூடிய மணமமைந்த குளிர்ந்த சோலையையுடைய நாட்டினனாகிய நம் பெருமகனது மலையைச் சிறப்பித்து இவ்வேலன் பாடானாயின் அவன் ஆடுகின்ற வெறியெல்லாம் என்ன பயனை விளைவிக்கும்—ஒன்றுமில்லை]

என்னுமிச் செய்யுளின், ஈற்றுக்கு அயலடியாகிய, "குன்றம் பாடா னாயின்" என்பது சிந்தடி யாதல் காண்க.

(3) அளவடி அல்லது நேரடி (நான்கு சீர்கள்)

ஆசிரியப்பா, வெண்பா கலிப்பா ஆகிய இப்பாக்களின் அடிகள் பெரும்பாலும் அளவடிகளாக இருக்கும். கலிவிருத்தம் அனைய பல பாவினங்களின் அடிகளுக்கும் பெரும்பகுதி ஏற்றதாயிருப்பது நான்கு சீர்களே. குறைவும் அதிகமும் ஈன்றிச் செய்யுளடிக்குத் தக்க அளவு நான்குசீர்களே ஆகும் என்னுங் கருத்தினுல் நான்கு சீர்களுடைய அடியினை, அளவடி அல்லது நேரடி என அழைக்கின்றனர்.

திருந்துகோ லெல்வளை வேண்டியா னழவும்
அரும்பிணி யுறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த வறவோன் போல
என்னை வாழி பலவே பன்னிய
மலைகெழு நாடனொடு நம்மிடைச் சிறிய
தலைப்பிரி வுண்மை யறிவான் போல

நீப்பநீங் காது வரின்வரை யமைந்து
தோட்பழி மறைக்கு முதவிப்
போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே.

[களவொழுக்கம் பூண்டிருந்த காலத்தில் சிற்சிலபோது தலைமகனைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டி நேர்கின்றபோது, தான் அந்தப்பிரிவிற் காற்றுமல் உடல்மெலிந் தழிகின்ற ளென்பதைத் தலைமகன் நன்கு உணர்ந்தால் விரைவில் வந்து மணங்கொள்வான் என மதித்து இதனை அவன் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அவன் புறத்தே வந்து நிற்பதையறியாத பாவனையில் தலைமகள்தோழிக்குரைத்தது இச்செய்யுள். இதன் பொருள்—மெலிவுற்ற என் தோளினின்று இதன்முன் இருந்த வளைகள் கழன்றுவிட்டதால், என்தந்தையிடஞ் சென்று, என்தோள்களுக்குப் பொருத்தமான அழகிய ஒளிபொருந்திய வளைகள் வேண்டுமென்று அழுதேன். தீராநோயுற்றவர்க்கு அவர் ஆசைப்படுவதையெல்லாம் கொடுத்துவிடுவதே தக்கதாக, அது செய்யாமல் மருந்துகள் தேடிக்கொடுத்த வொரு வைத்தியன்போல எனது தந்தை, புகழுடைய மலையுடைய நாட்டையுடைய எனது தலைவனும் நானும் சிறிதுசிறிது பிரிந்திருக்க நேர்கின்ற உண்மையைத் தானும் ஒருவாறு அறிந்திருப்பவன் போல், கழற்றினும் கழலமாட்டாததாய் இறுகப்பற்றிக் கொண்டு, என் தோள் மெலிகின்ற பழியைத் தோற்றுவிக்காத உதவியைச் செய்யவல்லவொரு மிகச்சிறு வளை செய்வது செறித்தனன். ஆதலின், அவன் நீடூழி வாழ்க]

என்னும் இந் நற்றிணை ஆசிரியப்பாவில் ஈற்றுக்கயலடி தவிர மற்ற அடிகளெல்லாம் நான்குசீர்கள் கொண்ட அளவடிகளால் அமைந்திருக்கின்றன. ஈற்றுக்கயலடி மாத்திரம் முச்சீருடையதாய் நிற்பதால் அது சிந்தடி.

கயல்போலு மென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தால்—கயல்புகழ்வல்
ஆரத்தா னேமருங்கு லந்தரள வாண்முறுவல்
ஈரத்தா லுள்வெதும்பும் யான்.

[காதலியின்பால் ஆர்வம் மிகுந்த ஒரு நாயகன் தான் மதிமயங்கிப் பிழைசெய்தான்போல் பாவிக்குமாற்றுல் அவளைப் பாராட்டியது இது. இதன் பொருள்—முத்து மாலையின் பாரத்திற்காற்றுமல் வருந்தும் உன் இடுப்பிற்கிரங்கியும், அழகிய முத்துப்போன்ற ஒளி பொருந்திய உன் பற்கள் விளங்கப் புரியும் புன்னகைக்கு ஆசைப்பட்டும் உள்ளம் வெதும்பிக்கிடக்கும் யான், கயல்போன்றிருக்கின்றன உன் கண்கள்என,உன்கண்ணை ஒருபோது பழிக்கின்றேன்;மற்று உன் கண்களைப்போல் புரள்வதால் உன் கண்போன்றிருக்கின்றது கயல் என அக்கயலை மறுபோது புகழ்கின்றேன்]

என்னும் இவ்வெண்பாவில், சிந்தடியாயமைந்த ஈற்றடி தவிர மற்ற மூன்று அடிகளும் நான்குசீர்கள் உடைமையால் அளவடிகள்.

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு படவரவ மிமையாது கண்விழிப்பக் [ன்று
குறைதங்கு கலைநிறையிற் கோளிழைக்குங் கொல்லெ
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்

[இரகசியம் தங்கிய அழகிய சபையில் உன் நடனத்தைக் கண்டு மகிழ்சிறந்து, விஷமுடைய பாம்பு கண்கொட்டாமல் விழித்துநிற்க, குறைந்திருக்கும் தன் கலைகள் நிறைந்தால் இப்பாம்பு பற்றிக்கொள்ளுமோ எனப் பயந்து, நிறைவுடைய பூரணையையடையாமலே, வறிது இருக்கின்ற பிறைச்சந்திரன் தங்கிய கற்றைச் சடையையுடைய பெரும்பற்றப் புலியூரனே—]

என்னும் இச்செய்யுள் நான்குசீர்கள் கொண்ட அளவடிகள் ஐந்து கொண்டது.

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

[ஏமாங்கத நாட்டின் வயல்களில் நெற்பயிரானது, சூல் கொண்டிருக்கின்றது என்பது தெரியாமல் கருத்தரிகின்ற பச்சைப்பாம்பின் தோற்றம்போல் மெல்லக் கருவிருந்து கதிர் ஈன்று, புதுச்செல்வம் வரப்பெற்ற கீழ்க்குடி மக்களைப் போல் தலைநிமிர்ந்து, பிறகு முதிர்ந்த கதிரின் பாரத்தால், மெய்ப்பொருளை ஆராய்ந்த நூற்கல்வி யறிவுடைய மாந்தரைப்போல மிகவும் தலைவணங்கி விளைந்தது.]

என்னும் இச் சிந்தாமணிச் செய்யுள் நாற்சீர் கொண்ட அளவடி நான்கினுல் ஆய கலிவிருத்தம்.

(4) நெடிலடி:—(ஐந்து சீர்)

கலிநிலைத்துறை, கட்டளைக் கலித்துறை, முதலிய செய்யுள்கள் ஐந்து சீர்களுடைய அடிகளால் அமையப்பெறும்.

காமம் யாவதுந் தருவது மப்பதங் கடந்தாற்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேணமோ நாராய ணாய.

[விரும்பியவைகளை யெல்லாம் கொடுப்பதும், அந்த நிலையைக் கடந்து விட்டால், க்ஷேமமாகிய மோக்ஷத்தை அடையும்படி செய்வதும், சிவந்த நெருப்பில் சொரிந்து ஓமங்கள் செய்கின்ற யாகம் முதலியவைகள் கொண்டு சேர்க்கும் போக பூமிகளில் சேர்விப்பதும் ஒருவனுடைய திருநாமம்—அதனைச் சொல்கின்றேன் — அதுதான் நமோ நாராயணாய என்பது — என்று பிரகலாதன் இரணியனுக்கு எடுத்துக் கூறினன்]

என்னுமிக் கம்பராமாயணச் செய்யுள் ஐந்து சீர்களுடைய நெடிலடிகள் நான்கு கொண்ட கலிநிலைத் துறை.

ஆழமன் னேவுடைத் திவ்வையர் வார்த்தை
    யனங்கனைந்து
வீழமுன் னேக்கிய வம்பலத் தான்வெற்பி
    னிப்புனத்தே
வேழமுன் னுய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னு
    மென்றழையாய்
மாழைமென் னேக்கி யிடையாய்க் கழிந்தது
    வந்துவந்தே.

[முதல்நாள் களவிற் புணர்ந்தகன்ற தலைமகன் பிற்றை நாட்களில் மீண்டு மவ்விடத்திற்கு வரும்போதெல்லாம் தலைமகள் தோழியுடனே இருப்பக்கண்டு, தான் அங்கு வந்ததற்கு வேறு வியாஜங்கள்கூறி மறைக்க முயன்றவனுகி, தான் வேட்டையாடித் துறத்திய "யானை அவ்வழி வந்ததோ, மான்வந்ததோ, முயல்அனைய பிற வந்ததோ" என வினவி அகல்வதும், பிறகு கையுறையாகத் தழைகொணர்வதும், பிறகு உண்மையைக் கூறித் தோழியின் உதவி வேண்டுங் கருத்தினனுய் வந்து, நாணத்தால் ஒன்றும் உரையாமல் நிற்பதும் நிகழக்கண்டு வியப்பெய்திய தோழி, செய்தி யாதெனத் தன் அறிவில் ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டதைச் செப்பும் இவ்வழகிய திருக்கோவைச் செய்யுள். இதன் பொருள்—மன்மதன் முன் அழிந்து விழும்படி விழித்துநோக்கிய சிற்றம்பலத் தீசன் தன் மலையிலுள்ள புனத்தருகே, முதலில் யானையாய், பிறகு மானுய், பிறகு முயலாய், அதன்பின் மெல்லிய தழையாய்க் குறைந்து குறைந்து வந்து, அதன்பின் மாவடுபோன்ற மெல்லிய பார்வையுடைய இவளது இடுப்பைப்போல் இவரது வார்த்தை ஒன்றுமில்லாமல் போய்விட்டது—ஆகையால் இச்செய்தி மிகவும் ஆழமுடையது]

என்னும் இச்செய்யுள் ஐஞ்சீருடைய நெடிலடிகள் நான்கு கொண்ட கட்டளைக் கலித்துறை.

(5) கழிநெடிலடி—(ஆறுசீர்கள் முதல் 16 சீர்கள் வரையில்) 6 முதல் 16 வரையில் சீர்களமைந்த அடிகளுக்கெல்லாம் கழிநெடிலடி என்னும் பெயர் பொதுவாக வழங்கப்படுகின்றதேனும், 6, 7,8, சீர்கள் உடைய அடிகளுக்கு அப்பெயர் சிறப்பாகப் பொருந்தும். 9, 10, சீர்கள் உடைய அடி, இடையாகு கழிநெடிலடி. அதற்கு மேற்பட்ட சீர்களுடையஅடி, கடையாகுகழிநெடிலடி.

(a) கழிநெடிலடி—(6, 7, 8, சீர்கள்).
(b) இடையாகு கழிநெடிலடி—(9, 10, சீர்கள்).
(c) கடையாகு கழிநெடிலடி—(10 சீர்களுக்கு மேற்பட்டவை).

ஞான மொழிகள்

(க. வேலுப்பிள்ளை)

அருள்முன்னே நின்றக்கா லாகாத தில்லை
அருளின்றே லாவது மில்.

மண்முதல் மூன்றின் வழிபோகாப் பேரன்பு
கண்ணுதலைக் காட்டி விடும்.

ஆசை பொருளிலே வைப்பார்க்கு மாசு
பெருகும்; பிறவி மிகும்.
[வைத்தக்கால்

அன்புயிர்மேல் வைத்திடுக வாக்கைமேல்
துன்பு பலவுந் தரும்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றும்
போமளவு நிற்கும் பிறப்பு.

ஒழுக்கவழி பாய்ந்தன்பு நீருள்ளத் தூற்றல்
விழுப்பம் பெரிது தரும்.

புகழ்தரு மின்பமும் பொல்லாத துன்புஞ்
சகடக்கால் போல வரும்.

தம்மிற் பிறர்பெரியா ரில்லாதான் றாளடைந்தார்
தம்மிற் பிறர்பெரியா ரில்.

நினைவாரைச் சிக்கெனச் சுற்றமாய் நேர்வான்
கனைகழலே கூற்றுக் கரண்.

எழுவா யிறுவாயி லாதானைப் பெற்றார்
தொழுவாரு ளெல்லாந் தலை.

துஞ்சும் பொழுதும் விழித்திருந்து காப்பானை
நெஞ்சமே யென்றும் நினை.

அற்றவர்க் கற்ற சிவனருளை யன்பினாற்
பெற்றவர்க் கில்லை பிறப்பு.

ஒன்பது வாயிற் குடமுடையு முன்னரே
எம்பெருமான் சேவடியை எண்.

உடலுயிர் நோயிரண்டு முண்மருந்தா லொப்பில்
கடவுளடி யாலகலுங் காண்.

உலகமாய் வேறு யுடனுமாய் நின்ற
தலைவன் சிவபெருமான் றான்.

இருவினையும் மும்மலமு மேகு முயரின்பம்
பெருகு மருளீசற் பெறின்.

பெருகப் பெருகப் பிடித்திடுக பேழை
இறுக இறைவ னடி.

வானம் புகிலென் மலைபுக்கொ ளித்திடிலென்
தான்செய்த தப்பா வரும்.
[தொல்லுலகில்

துன்பமே யின்பமாக் கொள்வோர்க்குத்
இன்பமே யாண்டு முள.

முயல்க வருள்துணையா மும்மலப் போர்தோல்வி
வரினுமது வெற்றிக்கு வித்து.

தோல்வி யுறினு மருள்துணையா மெய்முயன்றால்
வாலிய வெற்றி வரும்.

நிலையிற் பிரியாது சூழுற் றெதிர்க்க
மலவலி தானே யறும்.
[மலத்தால்

நோய்வருத்தம் நோய்மறைப்பாற் றுமறியார் மும்
ஆமயக்கு மவ்வாறே யாம்.

மருந்தின் மயக்கால் வருத்தந் தெரியார்
பொருந்துமலத் தாலறியார் நோய்.

மருந்தில்லா நோய்க்கு மருந்தாவான் பொற்றாள்
புரிந்தவர் பொன்று தவர்.

இல்லிருந்து மின்பத்தை நீத்த லெரிமேலே
புல்லுமயிர்ப் பாலத்தின் போக்கு.

எறிந்தகல் வீழ்தல்போற் றப்பாது சாரும்
புரிந்த வினையின் பயன்.
[மியான்

செய்தவம் போக்குமிகு தீமைகளை யாக்கு
செய்தெனென் றெண்ணுஞ் செருக்கு.

ஒளிப்பிடமீண் டில்லை காமத்தீக் காண்டும்
வெளிப்படா நின்று சுடும்.

துணையாச் சிறுதெய்வம் வேண்டுவோர் மண்ணூற்
புணையாக்கி வாரிகடந் தற்று.

ஒன்றொரு கோடியாய் நோன்பகற்றிக் கேடுதரும்
கன்றிய காமப் பிணி.

தனக்கும் பிறர்க்கும் பெருங்கேடு தூய
மனத்தகத்துக் காமம் தரும்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[255-வது பக்கத் தொடர்ச்சி]

வஞ்சனையின் வாய்ப்பட்டு வீயாரோ வீரர்கள்.

சுமந்திரனுடன் புறப்பட்ட இராமன், ஆர்வமுடன் இரைத்து மொய்க்கும் அயோத்தி வீதிவாய்,

தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தாற்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ னாள
வீகையி லுவந்தன ளியற்கையிது வென்றால்
தோகையவள் பேருவகை சொல்லலரி தென்பார்

[பெற்ற தாயாகிய கௌசலையின் கைகளில்இவன் வளர்ந்ததில்லை. தான் செய்த தவத்தால் கைகேசி கையில் வளர்ந்தான். அதனால் அவள், மகிழ்கின்ற இவ்வுலகை இவன் ஆளக் கொடுப்பதை உவந்தாள். இது இயற்கையே. அக்கைகேசியின் பேருவகையின் அளவைச் சொல்வது அரிது]

என்றுரைப்பார் குழுவினிடையே உழுதுசென்றான். அசோகவனத்தினின்று பிற்றைநாள் அநுமனுக்குச் சூளாமணி கொடுத்தனுப்பிய சானகி,

என்னொ ரின்னுயிர் மென்கிளிக் கியார்பெய ரீகேன்
மன்ன வென்றலு மாசறு கைகயன் மாதென்
அன்னை தன்பெய ராகென வன்பினொ டந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை
[தொடர்ந்தோய்.

[‘என்னுடைய ஒரு இன் உயிர்போன்ற மெல்லிய கிளிக்கு யார்பெயர் வைக்கலாம், என் நாயக, நீ சொல்,’ என்று யான் கேட்கவும், “குற்றமற்ற கேகயஅரசன் மகளாகிய என் அன்னையின் பேர் ஆகட்டும்” என அன்புடன் அந்நாள் அவர் சொன்ன மெய்வார்த்தையை அடையாளமாக அவருக்குச் சொல்]

என இயம்பியதினின்று இராமனது இயற்கையும் அன்னதே என்பதற் கையமிலது.

அன்னவன் அரண்மனையின்கண், வேத்தவையிற் காணுத் தன் கோத்தந்தையை நாடிச் சிற்றவை கோயிற் புகுதலோடும், அவனை நோக்கி,

நாயகன் உரையான் வாயால்
நானிது பகர்வென் என்னுத்
தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள்.

அன்னையென நினைக்கும் கோமைந்தனும், முன்னை நாள்வரையில் தன் தனயனே என நினைத்த கைகேசியும் சந்திக்கு மிக்காட்சி இலக்கியங்களுள் காணும் நாடக நிகழ்ச்சியில் இணை பிறிதரிதெனும் தரம் மிக வாய்ந்தது.

வந்தவ டன்னைச் சென்னி
மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் துவண்டு நின்று
னந்திவந் தடைந்த தாயைக்
கண்டவான் கன்றி னன்னுன்

[எதிர்வந்த கைகேசியை, தன்தலை தரையிற் படும்படி வணங்கி, வாசனையுடைய சிவந்த பவளம்போன்ற தன் சிவந்த வாயைத் தன் ஒருகையால் மூடிக்கொண்டும், மற்றொரு அழகிய பெரிய கையால் தன் வஸ்திரத்தை மடக்கிக்கொண்டும்,அந்தியில் வீடுவந்து சேர்ந்த பசுவைக் கண்ட கன்று போல்வானுகிய இராமன் துவண்டு நின்றான்]

தாயினைக் கண்ட கன்று துள்ளியோடி மெல்லென முட்டிக் குலவி விளையாடல் இயற்கையாக, இவ்வண்ணம் தலைவணங்குவதுமன்றிக் கைகட்டி வாய் புதைத்து இராமன் தன் அன்னைமுன் இன்று நிற்றல் புதுமையே எனினும், குறிப்பினுல் யாவையும் உணரவல்ல மதியின் கூர்மைவாய்ந்த இராகவன், கூற்றெனத் தமியளாய் வரும் அவள் முகத்தோற்றத்தினின்று ‘வேறுபட்ட உள்ளத்தள் இவள்’ என்று ஒருவாறு ஊகித்திருப்பான் என்பதை உணர்ந்தக்கால், உவமைக்கும் இயற்கைக்கும் இடையே இங்கு உளதுபோல் தோன்றுமிம் முரண் மறைந்துபோம்.

வஞ்சனையால் தன்னை வலைப்படுத்தவருமொருவன் சூழ்ச்சியைக் கடந்துசெல்லலென்பது திறமையாகலாமெனினும் வீரமன்று. தன்னை இரந்தொன்று பெற வருவான் ஒருவனது வேட்கையை மறுத்தல் இழிவன்றே. ஒருவரைச் சென்று ஈகென்றிரத்தலில்இளிவெனும் நாணம் புகுந்து ஒருபுறமும், விழைந்ததைத் துறக்கலாற்று வேட்கை மறுபுறமுமாய்ப் போராட, வஞ்சனையிற் கவர்ந்துகொள்ளத் துணிகின்றார் சிலர். ஆதலின், வஞ்சனைக்கு ஆளாகாது தன்னைக் காத்துக் கொள்பவன், இல்லையென் றிரந்தார்க்கொன் றீயாத கடுவச்சையனிலுங் கொடியனுகின்றான் என்னுமிந் நுண்மை உன்னி உணர்தற்பாலது. இல்லையென மறுக்கப்பட்ட ஒரு இரவலன், வேண்டியபொருள் எய்தப்பெறுக் குறையொன்றே யுடையவனுய் மீள்கின்றான். கேட்டபொழுதே அவன்மானம் அழிந்துவிட்டதாதலின், தான் இரந்ததைப் பெற்றாலும் பெறுவிடினும் இழப்பதற்கினி அவன்பால் மானமில்லை. இதற்கெதிர், கரவினுல் கவரவந்த வொருவனது சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டு அவன் கரவு கைகூடாவகைத் தடுத்துவிட்டால், விழைந்ததைப் பெறுததுமன்றிக் காக்கக் கருதிய மானமும் உக, இனித் தன் கதி யாவதாகுமோவென அச்சமுமெய்தி நடுங்கவேண்டி நேர்கின்றது. ஆதலின் கரவினின்று தன்னைக் காத்துக்கொள்வது இரக்கமுடையார்க்கியன்றதோர் தொழிலன்று. அதுவுமன்றி, தன்பாற் சூழ்ந்து வருகின்ற பிறனெருவனது கைதவம் சிதையாமல் உதவுவதும் உத்தமோத்தமர்களுக்கு எளியதோர் இயல்புமாகும். வஞ்சிக்கப்படுகின்றோம் என்பது தெரியாமல் அவ்வஞ்சனைக்கு இரையாவது பேதைமை; எனினும், வஞ்சனைக்குத்தான் இலக்காகி நிற்பது தெரிந்து அதனை அகற்றுதற்குரிய ஆற்றலிருந்தும், அவ்வஞ்சனை புரியப்புகுந்தவனது ஆசைக்குப் பங்கம் வாராதவாறு, அவ்வஞ்சனைக்கு ஆளாவது ஆண்மையாகும். இத்தகையதோர் ஆண்மையை இயற்றுதல்கிடக்க, எண்ணுவதும் மாருடர்க் கருமையே;—அதனைக் கடவுளராண்மை என்றே கொள்ளவேண்டும். முத்தமிட்டுத் தன்னைச் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க நினைத்திருந்த கைதவச்சீடன் யூதாஸ்காரியட் என்பவனது சூழ்ச்சியை முன்னரே தெரிந்திருந்த ஏசுகிறிஸ்துநாதர், அவ்வஞ்சனைக் கொடுமையை இடையூறின்று நிறைவேற்றிக் கொள்வதற்கு இடந்தந்து அவன் இட்ட முத்தத்தை இனிதின் ஏற்றுக்கொண்டார் எனக் கிறிஸ்தவர் சமயநூல் கூறும்.

அகத்தின் குறிப்பை முகத்தால் ஊகித்துக்கொள்வது, மதிநுட்பம் மிகவாய்ந்த இராமனுக்கு யாதும் அருமையன்று. கூற்றெனத் தமியளாய் முன்வருமக்கைகேசி கொடுமைகள் சில தன்பால் இழைப்பதற் குழைக்கின்றாள் என்பதை உணர்ந்துகொண்டான். அக்கொடுமையினின்று தான் தப்புவது எங்ஙனம் என்பதன்று இப்பொழுது இவன் கருத்து. “இக்கைகேசி நினைத்த தீமைக்கு யான் உடன்படேன் என அஞ்சி ஒருகால் அதனை இழைக்கத்துணியாமல் பின்னிடைந்து, எண்ணிய எண்ணம் எய்தப்பெறுமல் அழுங்கினளாய்ச் சோர்வாளேல் என் செய்வது’ என்னுமொரு திப்பிய பரிவுதானே இவ்வள்ளலின் சிந்தையை இப்பொழுது சேர்ந்தது. “வஞ்சனையால் உன்னை வீழ்த்தவே இவ் வரக்க வீடணன் இன்று பொய்த்தஞ்சம் புகப் போந்தனன்” எனத் தன் உழையினர் மந்திரஞ் சூழ்ந்துரைத்த காலையில்,இராமன்,

துறந்தநாட்கின்றுவந்து துன்னினுன்சூழ்ச்சியாலே
இறந்தநாளன்றேவென்றும்இருந்தநாளாவது.

[வீடணனைப் போகவிடுவதைக் காட்டிலும், இன்றுவந்து நெருங்கிய இவனது வஞ்சனையினுல் இறந்தநாள் அன்றோ என்றென்றும் வாழ்ந்தநாள் என்பதற்குரியது]

என்று எதிருரைத்த செவ்வியில் இந்தத் திப்பிய குணந்தோன்ற நிற்கின்றது. இக்குணம் எம்பெருமானுக்கு இயற்கையே என்பது பொருந்துமெனினும் முன்னோர் பிறவியில் இதனை இவன் தன்னுடைய வஞ்சனைக்குத் தளராமல் ஆளாய பெருந்தகை மாவலிபால் கற்றனனோ என்ன அயிர்க்க நேர்கின்றது. ஏனெனில் வாமனனுய்ச் சென்று, ‘மூவடி மண்ணருள் உண்டேல்’ எனக் கையிரந்தநாள், ‘தந்தனன்’ என விரைந்த மாவலியை,

கண்ட திறத்திது கைதவ மைய
கொண்டல் நிறக்குற ளென்பது கொள்ளேல்
அண்ட முமுற்று மகிலமு மேனுள்
உண்ட வனுமிது உணர்ந்து கொள்

எனத் தகைந்த சுக்கிராசாரியை அம்மாவலி “வெள்ளியை யாதல் விளம்பினை” என இகழ்ந்து,

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈய்ந்தவ ரல்ல திருந்தவர் யாரே

எனச் செவியறிவுறுத்திய மாபெரும் வாய்மையை அருகிருந்து முன்னொருகாலத்தில் கேட்டுக்கொண்டிருந்தவன் இந்த இராமனே.

ஆதலின், தன் இயற்கையொடு தான் கற்ற பாடமும் கைவந்த இராகவன், கைகேசி உட்கொண்ட எண்ணம் நிறைவேறுவ தெவ்வாறென நினைக்கலாயினுன். அருமந்த மைந்தனுய் உரிமையுடன் கொஞ்சி விளையாடினுல், அவளது மனம் இளகி ஒருகால் சூழ்ந்த விழைவினின்று நெகிழ்ந்து கழியினும் கழியலாம். அல்லது,மைந்தனெனும் பான்மையை மறைத்து நிமிர்ந்த தலையோடும் நான்ற கைகளோடும் பொது நோக்குமொரு நொதுமல் போல் நின்றுனெனின், அவள், தன் புணர்ப்பு இவன்பாற் செல்லாதென அஞ்சி விழைந்துழலும் தன்னுள்ளத்தை மாற்றிக் கொள்ளினும் கொள்ளலாம். எனவே பரிவிற்கும் பயத்திற்கும சிறிதேனும் இடமின்றிக் கழியும்படி, மண்ணுறச் சிரம்வணங்கிக் கைகட்டி வாய்புதைத்து ஓர் அடிமையின் வேடம்பூண்டு அளப்பரும் அன்பின் அருமையால் இராகவன் அன்று கைகேசியின் முன் நின்றிட்டான் என்றக்கால் எல்லாப்படியாலும் இந்நிலை நிகழ்ந்த நாடகத்திற் கேற்றதாகும். அவ்வண்ணம்

நின்றவன் றன்னைநோக்கிஇரும்பினுனியன்றநெஞ்சிற்
கொன்றுழல்கூற்றமென்னும்பெயரின்றிக்கொடுமைபூண்டா [ள்
இன்றெனக்குணர்த்தலாவதேயதேயென்னிலாகும்
ஒன்றுனக்குந்தைமைந்தஉரைப்பதோருரையுண்டென்றாள்.

[நின்றவனை நோக்கி, இரும்பினுல் ஆகிய நெஞ்சோடும், கொன்று திரியும் எமன் என்ற பெயர் மாத்திரம் இன்றி அந்த எமனுக்கு நிகரான கொடுமையை மேற்கொண்டவளான கைகேசி, “மைந்தனே,..........உனக்கு உன் தந்தை உரைக்கின்ற வார்த்தை ஒன்று உளது எனறாள்]

இப்பாசுரத்தின் மூன்றாமடி பொருள்மிக மயங்கி நிற்றல் வியப்பன்று. உரைக்கத்தான் வருவதை உள்ளபடி உரைக்கலாற்றுமல் அப்பெயரொன்று பூணுக் கூற்றன்னுள் வலிந்து சில வழங்க முயலகின்றுளாதலின், உரையாசிரியர்களும் வலிந்தே சில பொருள் செப்பி முடிக்க நேர்கின்றது. “இன்று யான் உனக்கு உணர்த்தவேண்டி நிற்கின்ற செய்தி (அரசன்) ஏவியதே என்னில் அது என்னுல் உரைக்கலாகும்” என்பதனினும், “இன்று என்னுல் உனக்கு உணர்த்தவேண்டி நிற்கின்ற செய்தி தக்கதே ; அது மிக்க கொடியதெனினும், அதனை உரைக்க வல்லேன் யான்” என்னும் பொருள் ஒரு சிறிது பொருத்தமுடையதாகலாம் இன்னவாறு கைகேசி கலங்குவதைக் கண்ட இராமன் அவளைத் தேற்றித் துணிவு புகட்ட விரைந்தனுகி,

எந்தையேயேவநீரேஉரைசெயஇயைவதுண்டேல்
உய்ந்தனனடியேன்என்னிற்பிறந்தவருண்டோவாழி
வந்ததென்தவத்தின்ஆயவருபயன்மற்றொன்றுண்டோ
தந்தையுந்தாயுநீரேதலைநின்றேன்பணிமின்என்றான்.

தண்ணெனும் மனத்தோடு வாயெடுத்தவள் கருத்து, இராமனது தண்ணெனும் மொழிகளால் திண்ணியதாயதுடன் அவளது உரையும் தெளிவடைந்து,

ஆழிசூழுலகமெல்லாம்பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகள்தாங்கித்தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானம்நண்ணிப்புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டில்வாவென்றேவினன்அரசன்என்றாள்.

இதனைக் கேட்டதும், அரிய கருமமொன் றாற்றினோர்க் குரியவொரு பெருமையால் நெருங்குமவ்வமைதியை எய்தியது இராமன்தன் இதயம், “சொல்லருஞ் சொல்லை யானிவளை இன்று சொல்வித்துவிட்டேன்” எனப்பொலிகின்ற நிலையினைப் பாராட்டும் கம்பர்பெருமான்,

இப்பொழுதெம்மனோரால்இயம்புதற்கெளிதோயாருஞ்
செப்பருங்குணத்திராமன் திருமுகச்செவ்விநோக்கின்
ஒப்பதேமுன்புபின்பு வாசகமுணரக்கேட்ட
அப்பொழுதலர்ந்தசெந்தா மரையினைவென்றதம்மா

என வியக்கின்றார். அன்னையின் முக இங்கிதத்தினின்று முன் ஊகித்ததை இப்பொழுது அவள் வாசகத்தால், கொள்வானிவன் அரசென்ன அற்றைப்போது அகமகிழ்ந்தலர்ந்த செந்தாமரையினைக் காட்டினும், ‘வவ்வினுள் இவள் தன் அரசை’ என்றுணர்ந்த இராமன் மிகச்சிறந்த செவ்வியுடன் பொலியலானுன். பொலிந்து,

மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ
என்னிதன் உறுதி அப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்.

என, வஞ்சனையை மேன்மேலும் மகிழ்வித்து, ஒருகால் தன்பால் இரக்கத்தால் அது மாறிவிட்டால் என்செய்வதென் றஞ்சினன்போல் அவணிவிட்டு மிக விரைந் தகல்வதானுன் “கேகயன்தன் மடந்தையின் இரக்கமின்மையாலன்றோ இன்று இவ்வுலகம் இராமனது தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றது” என முன், கருத்துமுற்றக் களிப்பெய்திக் கூறினர் கம்பர். அவளது இரக்கமின்மையைக் காட்டினும், அவள்தான் இரக்கங்கொள்ளாதபடி முயன்றியற்றிய இராமனது பெருந்தகைமை, பருகவரும் அப்புகழினைப் பின்னும் பலபடி சுவையூட்டிப் பெருக்குகின்றது. முன் “தந்தையுந் தாயும் நீரே” என்றபோதும், பின், “மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ” என்ற விடத்தும், பரிவுடன் சேர்ந்த பணிவுமொழிகளாய் அவை தோன்றியவெனினும், தந்தையென்பதெல்லாம் அவள் தலைக்கீடாகவே வைத்திருந்த புணர்ப்பினை உணரலாற்றுப் பேதையன் தான் அல்லனென்பு...பொருளாய்க் குறித்தனன் இராக...

ஆவணக் காப்பக
188912
NBI'414

நோயற்ற :: :: வாழ்வே

ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்

குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனா பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம்:—புரபசர். கா. கோவிந்தாச்சார்,

மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

Estd. **NATIONAL** 1906

INSURANCE COMPANY LIMITED.

Head Office:- NATIONAL INSURANCE BUILDINGS **7, Council House St, Calcutta.**

PHENOMENAL PROGRESS

Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering

This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—

113, Armenian St, Madras. } **T.ANANTACHARI**, B.A., *Branch Secretary*.

- நவீன பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. **2 0 0**
வெளி நாடு ,, ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. சுப்ரமணியம்.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$. டாக்டர் B. S. மல்லையா M. B, & C.M., & M.L C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வருக.

விலை:—(தபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

வாசகசாலை, புத்தகசாலைகளுக்கு ::

:: ஓர் அரிய சமயம்!

1931ஹு ஏப்ரல்மாதம் 1-ந்தேதி முதல் ஜூன் மாதம் 30-ந்தேதிவரையில் பிரசித்தி பெற்ற வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் எழுதியுள்ள கீழ்க்கண்ட 13 நாவல்களுக்கு ஏககாலத்தில் ஆர்டர் செய்யும் வாசகசாலைகளுக்கும் (லைப்ரெரி) புஸ்தகசாலைகளுக்கும் 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும். ஷை நாவல்களில் 1 அல்லது 2க்கு ஆர்டர் செய்வோர்களுக்கு ரூபாய்க்கு 2 அணா கமிஷன் கொடுக்கப்படும்.

வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

				ரூ.	அ.
1.	பூர்ண சந்திரோதயம்	4	பாகங்கள்	7	8
2.	மதனகல்யாணி	3	,,	4	8
3.	சௌந்தர கோகிலம்	3	,,	6	0
4.	திகம்பரசாமியார்	2	,,	3	0
5.	,, பால்யலீலை	2	,,	5	0
6.	மாயாவினோதப்பரதேசி	2	,,	5	0
7.	மேனகா ,,	2	,,	3	0
8.	பாலாமணி			2	8
9.	வஸந்தமல்லிகா			1	8
10.	வித்யாசாகரம்			1	4
11.	திவான் லொடபடசிங் பகதூர்			0	12
12.	திலோத்தமா			0	12
13.	மாணிக்கவாசகர்			0	8

பி. இரத்தின நாயகர் & சன்ஸ்,
புஸ்தக வியாபாரிகள்,
41. வெங்கட்ராமய்யர் தெரு, ஜீ. டி. மதராஸ்.

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

பிறர் கைப்பட்ட
சமையலென்ற பழியில்லை

ஆர் கைப்பட்டதோ, ஆர் பார்த்ததோ, ஆர் சமைத்ததோ என்று கூசிக்கூசி உண்ணுமல் விடுபவர்கள் மனரம்மியத்துடன் உணவு உண்ணக்கூடிய வழிகாட்டும் துணை

ருக்மணி குக்கர்

தாங்கள் தாங்களே வேண்டியபடி, வேண்டும்போது தம் கைகளாலே, தொந்தரவு இல்லாமல் சமைத்துக் கொள்ளலாம். 1, 2, 4, 6, 8, 12, 16, பேர்களுக்கு ஏழு அளவுகளில் ரூ. 12, 16, 20, 25, 31, 37,44-ல் உண்டு. விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம் (12) சென்னைப்பட்டினம்,

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.
விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.
எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

வருகிற மேமாதக் கடைசியில் காஞ்சீபுரத்தில் ஒரு அகில இந்தியப் பொருட்காட்சி நடைபெறுமென்றும் இது காங்கிரஸ்காரர்களின் சுதேசிய இபக்க முயற்சியென்றும் தெரிகின்றது.

***

இம்மாதம் 17-ந் தேதி யன்று புதிய இராஜப்பிரதி வில்லிங்டன் பிரபு தமது மனைவியுடன் பம்பாய் வந்து சேர்வார். அன்று இர்வின் பிரபு வில்லிங்டன் பிரபுவைச் சந்தித்து இந்திய அரசியல் விஷயமாய்ப் பேசுவார் என்று தெரிகின்றது.

***

காங்கிரஸ் தலைவரான ஸர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானு அப்துல்கலாம் ஆஸாத், ஜமன்லால் பஜாஜ், தேவதாஸ் காந்தி, தாஸ்தாண்டன் முதலிய பலர் கான்பூர் சென்றுள்ளனராம். அங்குச் சில நாள் தங்கி இந்து முகமதிய சமரஸ முயற்சி செய்வார்களாம்.

***

அஜீஷா என்னும் ஒரு ஜப்பானிய மாது தனது அழகிற் சிறந்த உதடை ஆயிரம் பொன்னிற்கு இன்ஷியூர் செய்திருக்கின்றாள் என்று அயல் நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

கனம் சாஸ்திரியார்:—ஸ்ரீமான் V. சீனுவாஸ சாஸ்திரியார் அரசாங்கத்தின் தூதராகக் கெனியாசெல்கின்றார். கெனியாவில் இந்தியர் நிலைவிஷயமாய் விசாரணை செய்து முடித்துக்கொண்டு மே மாதக் கடைசியில் லண்டன் செல்வார் என்று அரசாங்கச் செய்தி மூலம் தெரிகின்றது.

***

சிவனடியார் திருக்கூட்டம்:—திருமங்கை நகரில் சிவனடியார் திருக்கூட்டமொன்று சென்ற வார இறுதியில் கூடியது. அக்கூட்டத்தில் தமிழ்ப் புலவர் ஸ்ரீமான் V. இராமலிங்கம்பிள்ளை செய்த பிரசங்கச் சுருக்கம் வருமாறு:—

பிறந்த நாள் என்றால் சாதாரணமாக யாதாகிலும் ஒன்று தோன்றிய நாள் என்பதாம். குழந்தை பிறந்த நாள், அரசர் பிறந்த நாள், மற்றும் ஆசிரியர் முதலிய பெரியார் பிறந்த நாட்கள் பலபடக் கொண்டாடிப் போற்றப்படுவது காண்கின்றோம். இங்குப் பேசப் புகுந்தது ஓரோர் காலங்களில் ஒவ்வொரு நாளை மட்டும் பிறந்த நாளாகப் போற்றுவது போலன்றி என்றும் இனிய பிறந்த நாளாகக் காண்பதுபற்றி என்க. என்றும்பிறந்த நாளாவதுஎப்படியெனில்அவ்வாறுகக் காரணமுளது.

நாம் குழந்தைப் பருவமுதல் பையல் பருவம், காளைப்பருவம் மனிதப் பருவம் ஆகிய ஒவ்வொரு பருவம் எய்துங்காலும் ஒவ்வொரு விதமான புது அறிவும், செய்கை, ஆற்றலும் பிறந்து வருவது காண்கின்றோம். எனினும் கல்வி கேள்விகளால் அறிவு விருத்தி பெற்றதன் பயன் கடவுட்டன்மையை உணர்ந்து அதனை வழிபடுதலேயா மென்பது நூற்றுணிபாதல்

“ கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். ”

என்னும் பொய்யா மொழியால் மெய்யே உணரக் கிடக்கின்றது.

இவ்வாறு கடவுள் வழிபாடு கடைபிடித் தொழுகுவதில் கடவுட்டன்மையையும், பெருமையையும் மிகத் திட்பநுட்பமாய் விளக்கும் நூல்களையும் புராணங்களையும் நாடோறும் பயிலுதல் மிக மி[illegible]வசியம். அதிலும் சைவமக்களாகிய நாம் ந[illegible]க்குகந்த தேவார திருவாசகாதி பா[illegible] தினமும் போன்போடு ஓதுவதால் பேருணர்வும் பெரும்பயனும் பிறக்கும். இது குறித்து,

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை
அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப்
பாலைத் திகழொளியைத்
தேவர்கள் தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக்
காற்றைக் கனகடலைக் குலவரை
யைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப்
புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே

என்ற கோயில் பெரிய திருத்தாண்டகத்துள் ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் பெருமானைப் பேசாத நாள் பிறவாநாள் எனத் தெளிவுபடக் கூறியிருக்கின்றார்கள். எனவே இதன்மூலம் அரனது புகழைப் பேசும்நாள் பிறந்த நாள் என்பது பெறப்படுகின்றது. ஆகலின் என்றும் அரன்புகழை இடையறாது பேசி மகிழ்ந்திடில் ஒவ்வொரு நாளும் பிறந்த நாளாகும். இவ்வாறு என்றும் ஈசன் புகழை நேசமுடன் பாடிப் பரவி நலமுறுதற்கு இக்கால நவீனக் கழகங்கள் உண்மை யடியார் கூட்டத்திற் பற்றும் அருள் நூற்பயிற்சியும் ஆலய வழிபாடும் இன்றியமையாது வேண்டப்படும்.

ஈசனை நேசித்துப் பாடிப் பரவிப் பேசுவதால்பிறந்ததென்னெனில் அறிவு பிறந்த நாள், போற்றலின் பயனும் அருள்பிறந்த நாள், அருள் வழியே முடிவிலா வீட்டின்பம் முற்றப் பிறந்தநாளாகும்.

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை
ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.
எஸ். ஜீ. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்
நீங்கள் “அமிர்தகுணபோதினி” யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப்பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து எல்லாம் அநுபவம் எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0. மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனம்.

புரோப்ரைட்டர்
தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலைத் தெரு, சென்னை.

188912

REG. NO. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆயாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெறுகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

காலஞ்சென்ற எம். ஸி. நஞ்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்

பண்டாரம்ஸ் மூலிகை மாந்த எண்ணெய்.

தாய்மார்களிடம் இம்மருந்து அவசியம் இருக்க வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்களுக்கு யாதொரு பயமுமின்றிக் கொடுக்கக்கூடிய பேதிஎண்ணெய் இதுவே. வயிற்று ஜீரணகாரிகளில் ஏற்படும் கோளாறுகளே குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகள் பலவற்றிற்கு மூக்கிய காரணம். இவ்வியாதிகளை நீக்குவதில் இம் மாந்த எண்ணெய் இணையற்றது. இந்த எண்ணெயை உபயோகித்துவரக் குழந்தைகளுக்கு யாதொரு வியாதியும் அணுகா. ஒரு அவுன்ஸ் புட்டி அணா 12.

விபர காட்லாக் இனும்.

எம். ஸி. என்வ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49. சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்.பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப் பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)